மஹௌஷதிம்	சிறந்த ஓஷதியை
அஜாநன்	அறியாதவராய்
சிந்தாம் அப்யகமத்	கவலை அடைந்தார்.

तस्य बुद्धिः समुत्पन्ना मारुतेरमितौजसः ।
इदमेव गमिष्यामि गृहीत्वा शिखरं गिरेः ॥

தஸ்ய புத்தி: ஸமுத்பன்னா மாருதே: அமிதௌஜஸ: ।
இதம் ஏவ கமிஷ்யாமி க்ருஹீத்வா ஶிகரம் கிரே: ॥ 28

அமிதௌஜஸ:	அளவற்ற ஆற்றலுடைய
தஸ்ய	அந்த
மாருதே:	மாருதிக்கு
புத்தி:	பின்வரும் ஆலோசனை
ஸமுத்பன்னா	உண்டாயிற்று;
கிரே:	பர்வதத்தின்
இதம்	இந்த
ஶிகரம் ஏவ	சிகரத்தையே
க்ருஹீத்வா	கைக்கொண்டு
கமிஷ்யாமி	செல்வேன்.

अस्मिन् हि शिखरे जातामोषधीं तां सुखावहाम् ।
प्रतर्केणावगच्छामि सुषेणोऽप्येवमब्रवीत् ॥

அஸ்மின் ஹி ஶிகரே ஜாதாம் ஓஷதீம் தாம் ஸுகாவஹாம் ।
ப்ரதர்கேண அவ கச்சாமி ஸுஷேணோऽபி ஏவமப்ரவீத் ॥ 29

தாம் ஸுகாவஹாம்	அந்த நலனையளிக்கும்
ஓஷதீம்	ஓஷதியை
அஸ்மின்	இந்த
ஶிகரே ஹி	சிகரத்தில்தான்
ஜாதாம்	இருக்கின்றதாய்
ப்ரதர்கேண	ஊகத்தால்
அவகச்சாமி	அறிகின்றேன்;
ஸுஷேண: அபி	ஸுஷேணனும்
ஏவம்	இப்படித்தான்
அப்ரவீத்	தெரிவித்தான்.

अगृह्य यदि गच्छामि विशल्यकरणीमहम् ।
कालात्ययेन दोषः स्याद्वैक्लव्यं च महद्भवेत् ॥

அக்ருஹ்ய யதி கச்சாமி விஶல்யகரணீமஹம் ।
காலாத்யயேன தோஷ: ஸ்யாத் வைக்லவ்யம் ச மஹத் பவேத் ॥ 30

விஶல்ய கரணீம்	விசல்யகரணியை
அக்ருஹ்ய	கொள்ளாது
அஹம் கச்சாமி யதி	நான் திரும்பிச் செல்வேனேயாகில்
காலாத்யயேன	காலதாமதத்தால்
தோஷ:	கெடுதல்
ஸ்யாத்	நேரலாம்;
மஹத்	பெரும்
வைக்லவ்யம் ச	ஆபத்தும்
பவேத்	விளையலாம்.

इति संचिन्त्य हनुमान् गत्वा क्षिप्रं महाबलः ।
आसाद्य पर्वतश्रेष्ठं त्रिः प्रकम्प्य गिरेः शिरः ॥

இதி ஸஞ்சிந்த்ய ஹநுமான் கத்வா க்ஷிப்ரம் மஹாபல: ।
ஆஸாத்ய பர்வத ஶ்ரேஷ்டம் த்ரி: ப்ரகம்பய கிரே: ஶிர: ॥ 31

फुल्लनानातरुगणं समुत्पाट्य महाबलः ।
गृहीत्वा हरिशार्दूलो हस्ताभ्यां समतोलयत् ॥

புல்லநாநாதருகணம் ஸமுத்பாட்ய மஹாபல: ।
க்ருஹீத்வா ஹரிஶார்தூலோ ஹஸ்தாப்யாம் ஸமதோலயத் ॥ 32

மஹாபல:	மகாபலசாலியும்
ஹரிஶார்தூல:	வானரோத்தமருமான
ஹநுமான்	ஹனுமார்
இதி	மேற்கண்டவாறு
ஸஞ்சிந்த்ய	ஆலோசித்து

க்ஷிப்ரம் கத்வா	- விரைந்து சென்று
பர்வத ஶ்ரேஷ்டம்	- சிறந்த மலையை
ஆஸாத்ய	- கிட்டி
கிரே:	- மலையின்
புல்லநாநாதருகணம்	- பூத்த பலவித மரக்கூட்டங்களுற்ற
தடம்	- வரைத்தலத்தை
த்ரி: ப்ரகம்ப்ய	- மூன்றுதரம் அசைத்து
க்ருஹீத்வா	- பற்றி
மஹாபல:	- மகாபலசாலியாகுமவர்
ஹஸ்தாப்யாம்	- இரு கைகளாலும்
ஸமுத்பாட்ய	- பெயர்த்தெடுத்து
ஸமதோலயத்	- தூக்கிக்கொண்டார்.

स नीलमिव जीमूतं तोयपूर्णं नभःस्थलात् ।
आपपात गृहीत्वा तु हनुमाञ्शिखरं गिरेः ॥

ஸ நீலமிவ ஜீமூதம் தோயபூர்ணம் நப: ஸ்தலாத் ।
ஆபபாத க்ருஹீத்வா து ஹநுமான் ஶிகரம் கிரே: ॥ 33

து	- அப்பொழுது
ஸ: ஹநுமான்	- அந்த ஹனுமார்
தோய பூர்ணம்	- நீர்நிறைந்து
நீலம்	- கரிய
ஜீமூதம் இவ	- மேகம் போலிருக்கும்
கிரே:	- மலையில்
ஶிகரம்	- சிகரத்தை
க்ருஹீத்வா	- கைக்கொண்டு
நப: ஸ்தலாத்	- ஆகாய மார்க்கமாய்
ஆப பாத	- பறந்து சென்றார்.

समागम्य महावेगः संन्यस्य शिखरं गिरेः ।
विश्रम्य किञ्चिद्धनुमान् सुषेणमिदमब्रवीत् ॥

ஸமாகம்ய மஹாவேக : ஸந்ந்யஸ்ய ஶிகரம் கிரே: ।
விஶ்ரம்ய கிஞ்சித் ஹநுமான் ஸுஷேணம் இதம் அப்ரவீத் ॥ 34

மஹாவேக:	- சக்தி மிக்கவரான
ஹநுமான்	- ஹனுமார்
ஸமாகம்ய	- வந்து சேர்ந்து
கிரே:	- மலையின்
ஶிகரம்	- சிகரத்தை
ஸந்ந்யஸ்ய	- கீழிறிக்கி விட்டு
கிஞ்சித்	- கொஞ்சம்

விஶ்ரம்ய - இளைப்பாறி
ஸுஷேணம் - ஸுஷேணனைப் பார்த்து
இதம் - பின்வருமாறு
அப்ரவீத் - மொழிந்தார்.

ओषधिं नावगच्छामि तामहं हरिपुंगव ।

ஓஷதிம் நாவகச்சாமி தாமஹம் ஹரிபுங்கவ । 35
ஹரிபுங்கவ - வானரோத்தமா !
அஹம் - நான்
தாம் ஓஷதிம் - அந்த ஓஷதியை
அவகச்சாமி ந - அறிகிலேன்.

तदिदं शिखरं कृत्स्नं गिरेस्तस्याहृतं मया ॥

தத் இதம் ஶிகரம் க்ருத்ஸ்நம் கிரே: தஸ்ய ஆஹ்ருதம் மயா ॥ 36
தத் - ஆகையினால்
மயா - என்னால்
தஸ்ய - இந்த
கிரே: - பர்வதத்தின்
இதம் ஶிகரம் - இந்த சிகரம்
க்ருத்ஸ்நம் - முழுவதுமே
ஆஹ்ருதம் - கொண்டு வரப்பட்டிருக்கிறது.

एवं कथयमानं तं प्रशस्य पवनात्मजम् ।
सुषेणो वानर श्रेष्ठो जग्राहोत्पाट्य चौषधीम् ॥

ஏவம் கதயமானம் தம் ப்ரஶஸ்ய பவநாத்மஜம் ।
ஸுஷேணோ வானரஶ்ரேஷ்டோ ஜக்ராஹ உத்பாட்ய ச ஓஷதீம் ॥ 37
வானர ஶ்ரேஷ்ட: - வானரோத்தமனான
ஸுஷேண: - ஸுஷேணன்
ஏவம் - இவ்வாறு
கதயமானம் - சொல்லும்
தம் பவநாத்மஜம் - அந்த மாருதியை
ப்ரஶஸ்ய - புகழ்ந்து
ஓஷதீம் ச - ஓஷதியையும்
உத்பாட்ய - பறித்து
ஜக்ராஹ - எடுத்துக்கொண்டான்.

विस्मितास्तु बभूवुस्ते रणे वानरराक्षसाः ।
दृष्ट्वा हनुमतः कर्म सुरैरपि सुदुष्करम् ॥

விஸ்மிதாஸ்து பபூவுஸ் தே ரணே வானர ராக்ஷஸா: ।
த்ருஷ்ட்வா ஹநுமத: கர்ம ஸுரைரபி ஸுதுஷ்கரம் ॥ 38

து	-	அப்பொழுது
ரணே	-	போரில்
தே	-	அந்த
வானர ராக்ஷஸா:	-	வானரர்களும், ராக்ஷஸர்களும்
ஹநுமத:	-	ஹனுமாருடைய
ஸுரை: அபி	-	தேவர்களாலும்
ஸுதுஷ்கரம்	-	செயற்கரிய
கர்ம	-	செயலை
த்ருஷ்ட்வா	-	பார்த்து
விஸ்மிதா:	-	ஆச்சர்யங்கொண்டவர்களாய்
பபூவு:	-	ஆனார்கள்.

ततः संक्षोदयित्वा तामोषधीं वानरोत्तमः ।
लक्ष्मणस्य ददौ नस्तः सुषेणः सुमहाद्युतेः ॥

தத: ஸம்க்ஷோதயித்வா தாம் ஓஷதீம் வாநரோத்தம: ।
லக்ஷ்மணஸ்ய ததௌ நஸ்த: ஸுஷேண: ஸுமஹாத்யுதே: ॥ 39

வாநரோத்தம:	-	வானரோத்தமனான
ஸுஷேண:	-	ஸுஷேணன்
தத:	-	அப்பொழுது
தாம்	-	அந்த
ஓஷதீம்	-	ஓஷதியை
ஸம்க்ஷோபயித்வா	-	கசக்கி
ஸுமஹாத்யுதே:	-	மிக மகிமை வாய்ந்த
லக்ஷ்மணஸ்ய	-	லக்ஷ்மணரது
நஸ்த:	-	நாஸிகையில்
ததௌ	-	பிடித்தான்.

सशल्यस्तां समाघ्राय लक्ष्मणः परवीरहा ।
विशल्यो विरुजः शीघ्रमुदतिष्ठन्महीतलात् ॥

ஸஶல்யஸ்தாம் ஸமாக்ராய லக்ஷ்மண: பரவீரஹா ।
விஶல்யோ விருஜ: ஶீக்ரமுததிஷ்டன் மஹீதலாத் ॥ 40

பரவீரஹா	-	சத்ருஸம்ஹாரகரும்
ஸஶல்ய:	-	வேதனை கொண்டவருமான
லக்ஷ்மண:	-	லக்ஷ்மணர்
தாம்	-	அதை
ஸமாக்ராய	-	முகர்ந்து
ஶீக்ரம்	-	விரைவில்
விஶல்ய:	-	புண்களற்றவராய்
விருஜ:	-	வேதனையற்றவராய்

மஹீதலாத்	-	பூமியினின்று
உததிஷ்டத்	-	எழுந்தார்.

तमुत्थितं ते हरयो भूतलात् प्रेक्ष्य लक्ष्मणम् ।
साधु साध्विति सुप्रीताः सुषेणं प्रत्यपूजयन् ॥

தம் உத்திம் தே ஹரயோ பூதலாத் ப்ரேக்ஷ்ய லக்ஷ்மணம் ।
ஸாது ஸாத்விதி ஸுப்ரீதா: ஸுஷேணம் ப்ரத்ய பூஜயன் ॥ 41

தே ஹரய:	-	அந்த வானரர்கள்
தம் லக்ஷ்மணம்	-	அந்த லக்ஷ்மணரை
பூதலாத்	-	பூதலத்தினின்று
உத்திதம்	-	எழுந்தவராய்
ப்ரேக்ஷ்ய	-	பார்த்து
ஸுப்ரீதா:	-	ஆனந்தங்கொண்டவர்களாய்
ஸாது	-	நன்று
ஸாது இதி	-	நன்று என்று
ஸுஷேணம்	-	ஸுஷேணனை
ப்ரத்ய பூஜயன்	-	புகழ்ந்து கொண்டாடினார்கள்.

एह्येहीत्यब्रवीद्रामो लक्ष्मणं परवीरहा ।

ஏஹி ஏஹி இதி அப்ரவீத் ராமோ லக்ஷ்மணம் பரவீரஹா । 42

பரவீரஹா	-	சத்ருவீரஸம்ஹாரகரான
ராம:	-	ஸ்ரீராமர்
லக்ஷ்மணம்	-	லக்ஷ்மணரைப் பார்த்து
ஏஹி	-	இங்கு வா,
ஏஹி	-	பக்கலில் வா,
இதி	-	என்று
அப்ரவீத்	-	மொழிந்தார்.

सस्वजे स्नेहगाढं च बाष्पपर्याकुलेक्षणः ॥

ஸஸ்வஜே ஸ்நேஹகாடம் ச பாஷ்பபர்யாகுலேக்ஷண: ॥ 43

பாஷ்ப பர்யா குலேக்ஷண:-கண்ணீர் ததும்பிய கண்களுற்றவராய் அவர்

ஸ்நேஹகாடம் ச	-	அன்பினதிசயத்தால் இறுக
ஸஸ்வஜே	-	தழுவிக் கொண்டார்.

अब्रवीच्च परिष्वज्य सौमित्रिं राघवस्तदा ॥

அப்ரவீத் ச பரிஷ்வஜ்ய ஸௌமித்ரிம் ராகவஸ்ததா । 44

ததா	-	அப்பொழுது
ராகவ:	-	ஸ்ரீராமர்
ஸௌமித்ரிம்	-	லக்ஷ்மணரை

பரிஷ்வஜ்ய	தழுவிக் கொண்டு
அப்ரவீத் ச	பின்வருமாறு புகன்றார்.

दिष्ट्या त्वां वीर पश्यामि मरणात्पुनरागतम् ।।

திஷ்ட்யா த்வாம் வீர பஶ்யாமி மரணாத் புனராகதம் ॥ 45

வீர	வீர
த்வாம்	உன்னை
மரணாத்	மரணத்தினின்று
புன: ஆகதம்	மீண்டெழுந்தவனாய்
பஶ்யாமி	பார்க்கின்றேன்;
திஷ்ட்யா	எனது பாக்யமே பாக்யம்.

न हि मे जीवितेनार्थः सीतया चापि लक्ष्मण ।

को हि मे विजयेनार्थस्त्वयि पञ्चत्वमागते ।।

ந ஹி மே ஜீவிதேன அர்த: ஸீதயா சாபி லக்ஷ்மண ।
கோ ஹி மே விஜயேந அர்தஸ் த்வயி பஞ்சத்வம் ஆகதே ॥ 46

லக்ஷ்மண	லக்ஷ்மணா !
த்வயி	நீ
பஞ்சத்வம்	மரணத்தை
ஆகதே	அடைந்துவிடில்
மே	உனக்கு
ஜீவிதேன ஹி	உயிரினாலும்
அர்த:	பயனொன்றும்
ந	இல்லை
ஸீதயா அபி	ஸீதையாலும்
ச	அப்படியே பயன் ஒன்றும் இல்லை;
மே	எனக்கு
விஜயேந ஹி	வெற்றியால்தான்
அர்த: க:	ஆவதென்ன ?

इत्येवं वदतस्तस्य राघवस्य महात्मनः ।

खिन्नः शिथिलया वाचा लक्ष्मणो वाक्यमब्रवीत् ।।

இத்யேவம் வதத: தஸ்ய ராகவஸ்ய மஹாத்மன: ।
கின்ன: ஶிதிலயா வாசா லக்ஷ்மணோ வாக்யமப்ரவீத் ॥ 47

மஹாத்மன:	மகாத்மாவான
தஸ்ய	அந்த
ராகவஸ்ய	ஸ்ரீராமர்
இதி ஏவம்	மேற்கண்டவாறு
வதத:	மொழிகையில்

லக்ஷ்மண:	-	லக்ஷ்மணர்
கின்ன:	-	சோர்ந்திருந்தவராய்
ஶிதிலயா	-	தழதழத்த
வாசா	-	சொற்கொண்டு
வாக்யம்	-	ஒரு சொல்லை
அப்ரவீத்	-	பின்வருமாறு மொழிந்தார்.

तां प्रतिज्ञां प्रतिज्ञाय पुरा सत्यपराक्रम ।
लघुः कश्चिदिवासत्त्वो नैवं वक्तुमिहार्हसि ॥

தாம் ப்ரதிஞாம் ப்ரதிஞாய புரா ஸத்ய பராக்ரம ।
லகு: கஶ்சித் இவ அஸத்யோ நைவம் வக்துமிஹார்ஹஸி ॥ 48

ஸத்ய பராக்ரம	-	ஸத்யத்தையே ஸர்வசக்தியாயிக்கொண்டவ
புரா	-	முன்பு
தாம்	-	அந்த
ப்ரதிஞாம்	-	பிரதிஜ்ஜையை
ப்ரதிஞாய	-	உறுதி கூறிவிட்டு
அஸத்வ:	-	ஆற்றலற்றவனும்
லகு:	-	ஸாமான்யனுமான
கஶ்சித் இவ	-	ஒருவனைப் போல்
ஏவம்	-	இப்படி
இஹ	-	இப்பொழுது
வக்தும் அர்ஹஸி ந	-	தேவரீர் பேசக்கூடாது.

न हि प्रतिज्ञां कुर्वन्ति वितथां साधवोऽनघ ।
लक्षणं हि महत्त्वस्य प्रतिज्ञापरिपालनम् ॥

ந ஹி ப்ரதிஞாம் குர்வந்தி விததாம் ஸாதவோऽநக ।
லக்ஷணம் ஹி மஹத்த்வஸ்ய ப்ரதிஞா பரிபாலனம் ॥ 49

அநக	-	புண்யாத்மாவே
ஸாதவ: ஹி	-	ஸாதுக்களோ
ப்ரதிஞாம்	-	உறுதி மொழியை
விததாம்	-	வீணாகியதாய்
குர்வந்தி ந	-	செய்யமாட்டார்கள்;
மஹத்த்வஸ்ய	-	மகான்களின் மகிமைக்கு
ப்ரதிஞா பரிபாலனம் ஹி	-	உறுதிமொழியை கடைப்பிடித்தொழுகுவதே
லக்ஷணம்	-	சர்வமுமாயுள்ளது.

नैराश्यमुपगन्तुं ते तदलं मत्कृतेऽनघ ।

நைராஶ்யம் உபகந்தும் தே ததலம் மத்க்ருதே(அ)நக । 50

அநக	-	குற்றஞ்சிறிதுமற்ற குணவாளனே !
தத்	-	ஆகையால்
மத்க்ருதே	-	என் காரணமாய்
நைராஶ்யம் வை	-	விரக்தியை
உபகந்தும் அலம்	-	அடைந்தது போதும்.

वधेन रावणस्याद्य प्रतिज्ञामनुपालय ॥

வதேன ராவணஸ்ய அத்ய ப்ரதிஞாம் அநுபாலய ॥ 51

அத்ய	-	இப்பொழுது
ராவணஸ்ய	-	ராவணனது
வதேன	-	வதையால்
ப்ரதிஞாம்	-	பிரதிஜ்ஞையை
அநுபாலய	-	பரிபாலிப்பீராக.

न जीवन् यास्यते शत्रुस्तव बाणपथं गतः ।
नर्दतस्तीक्ष्णदंष्ट्रस्य सिंहस्येव महागजः ॥

ந ஜீவன் யாஸ்யதே ஶத்ருஸ்தவ பாணபதம் கத: ।
நர்தத: தீக்ஷ்ண தம்ஷ்ட்ரஸ்ய ஸிம்ஹஸ்யேவ மஹாகஜ: ॥ 52

மஹாகஜ:	-	ஒரு பெருயானை
நர்தத:	-	கர்ஜிப்பதும்
தீக்ஷ்ண தம்ஷ்ட்ரஸ்ய	-	கூரிய பற்களுற்றதுமான
ஸிம்ஹஸ்ய	-	ஒரு சிங்கத்தின் முன்
இவ	-	எவ்வாறோ அவ்வாறே
தவ	-	தேவரீரது
பாணபதம்	-	பாணமார்கத்தில்
கத:	-	வந்த
ஶத்ரு:	-	மாற்றான்
ஜீவன்	-	பிழைத்து
யாஸ்யதே ந	-	செல்ல மாட்டான்.

अहं तु वधमिच्छामि शीघ्रमस्य दुरात्मनः ।
यावदस्तं न यात्येष कृतकर्मा दिवाकरः ॥

அஹம் து வதமிச்சாமி ஶீக்ரமஸ்ய துராத்மன: ।
யாவதஸ்தம் ந யாதி ஏஷ க்ருத்கர்மா திவாகர: ॥ 53

அஹம்	-	நான்
க்ருத கர்மா	-	ஸர்வசக்திமானாகிய
ஏஷ: திவாகர:	-	இந்த பகலவன்
அஸ்தம்	-	அஸ்தமனத்தை

யாதி ந யாவத் து	அடையாதிருக்கும் பொழுதே
ஶீக்ரம்	விரைவில்
அஸ்ய	இந்த
துராத்மன:	துராத்மாவின்
வதம்	வதையை
இச்சாமி	கோருகிறேன்.

यदि वधमिच्छसि रावणस्य संख्ये यदि च कृतां त्वमिहेच्छसि प्रतिज्ञाम् ।
यदि तव राजवरात्मजाभिलाषः कुरु च वचो मम शीघ्रमद्य वीर ॥

யதி வதமிச்சஸி ராவணஸ்ய ஸங்க்யே
யதி ச க்ருதாம் த்வம் இஹேச்சஸி ப்ரதிஞாம் ।
யதிதவ ராஜவராத்மஜாபிலாஷ:
குரு ச வசோ மம ஶீக்ரமத்ய வீர ॥ 54

ஸங்க்யே	போரில்
த்வம்	தேவரீர்
ராவணஸ்ய	ராவணனது
வதம்	வதையை
இச்சஸி யதி	விரும்புகின்றீர் எனில்
இஹ	இப்பொழுது
ப்ரதிஞாம் ச	பிரதிஜ்ஞையையும்
க்ருதாம்	செய்து முடிக்கப்பட்டதாய்
இச்சஸி யதி	விரும்புகின்றீர் எனில்
தவ	தேவரீருக்கு
ராஜவராத்ம ஜாபிலாஷ:	ராஜகுமாரியிடம் அதிசய அன்பு
யதி	உண்டெனில்
வீர	வீரரே !
அத்ய ச	இப்பொழுதே
மம	எனது
வச:	விண்ணப்பத்தை
ஶீக்ரம்	விரைவாய்
குரு	செய்தருள்வீராக.

இத்யார்ஷே ஶ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் யுத்த காண்டே லக்ஷ்மணஸஞ்ஜீவனம் நாம த்வ்ய்யுத்தரஶததம: ஸர்க: ॥

த்ரய்யுத்தர ஶததம: ஸர்க: - 103

लक्ष्मणेन तु तद्वाक्यमुक्तं श्रुत्वा स राघवः ।
संदधे परवीरघ्नो धनुरादाय वीर्यवान् ॥
रावणाय शरान् घोरान् विससर्ज चमूमुखे ॥

லக்ஷ்மணேன து தத்வாக்யம் உக்தம் ஶ்ருத்வா ஸ ராகவ: ।
ஸந்ததே பரவீரக்னோ தநுராதாய வீர்யவான் ॥ 1
ராவணாய ஶரான் கோரான் விஸஸர்ஜ சமூமுகே ॥ 2

பர வீரக்ந:	-	சத்ருஸம்ஹாரகரும்
வீர்யவான்	-	வீர்யசாலியுமான
ஸ: ராகவ:	-	அந்த ஸ்ரீராமர்
து	-	அப்பொழுது
லக்ஷ்மணேன	-	லக்ஷ்மணரால்
உக்தம்	-	மொழியப்பெற்ற
தத் வாக்யம்	-	அந்த சொல்லை
ஶ்ருத்வா	-	அங்கீகரித்து
தநு:	-	வில்லை
ஆதாய	-	கைக்கொண்டு
கோரான்	-	பயங்கரமான
ஶரான்	-	பாணங்களை
ஸந்ததே	-	தொடுத்தார்;
சமூமுகே	-	படைமுகத்தில்
ராவணாய	-	ராவணன் மீது
விஸ்ஸர்ஜ	-	விடுக்கலானார்.

अथान्यं रथमारुह्य रावणो राक्षसाधिपः ।
अभ्यद्रवत काकुत्स्थं स्वर्भानुरिव भास्करम् ॥

அத அன்யம் ரதமாருஹ்ய ராவணோ ராக்ஷஸாதிப: ।
அப்யத்ரவத காகுத்ஸ்தம் ஸ்வர்பாநு: இவ பாஸ்கரம் ॥ 3

ராக்ஷஸாதிப:	-	ராக்ஷஸமன்னான
ராவண:	-	ராவணன்
அத	-	அப்பொழுது
அன்யம் ரதம்	-	மற்றொரு ரதத்தில்
ஆருஹ்ய	-	ஏறிக்கொண்டு
ஸ்வர்பாநு:	-	ராகு
பாஸ்கரம்	-	சூர்யபகவானை
இவ	-	எவ்வாறோ அவ்வாறே
காகுத்ஸ்தம்	-	ஸ்ரீராமரை
அப்யத்ரவத	-	எதிர்த்து வந்தான்.

दशग्रीवो रथस्थस्तु रामं वज्रोपमैः शरैः ।
आजघान महाघोरैर्धाराभिरिव तोयदः ॥

தஶக்ரீவோ ரதஸ்தஸ்து ராமம் வஜ்ரோபமை: ஶரை: ।
ஆஜகான மஹாகோரை: தாராபிரிவ தோயத: ॥

ரதஸ்த:	- ரதத்திலிருக்கும்
தஶக்ரீவ:	- தசகண்டன்
து	- அப்பொழுது
வஜ்ரோபமை:	- வஜ்ராயுதத்தை நிகர்த்த
மஹாகோரை:	- மிகப் பயங்கரமான
ஶரை:	- பாணங்களால்
ராமம்	- ஸ்ரீராமரை
தாராபி:	- மழைத்தாரைகளால்
தோயத:	- மேகம்
இவ	- எவ்வாறோ அவ்வாறே
ஆஜகான	- தாக்கினான்.

दीप्तपावकसंकाशैः शरैः काञ्चनभूषणैः ।
निर्बिभेद रणे रामो दशग्रीवं समाहितम् ॥

தீப்தபாவக ஸங்காஶை: ஶரை: காஞ்சன பூஷணை: ।
நிர்பிபேத ரணே ராமோ தஶக்ரீவம் ஸமாஹிதம் ॥

ராம:	- ஸ்ரீராமர்
ரணே	- போரில்
ஸமாஹிதம்	- ஊக்கங்கொண்ட
தஶக்ரீவம்	- தசகண்டனை,
காஞ்சன பூஷணை:	- பொன்னாலலங்கரிக்கப் பட்டவைகளும்
தீப்த பாவக ஸங்காஶை:	-ஜ்வலிக்கும் அக்னியை நிகர்த்தவைகளுமான
ஶரை:	- பாணங்களால்
நிர்பிபேத	- பிளந்தார்.

भूमौ स्थितस्य रामस्य रथस्थस्य च रक्षसः ।
न समं युद्धमित्याहुर्देवगन्धर्वदानवाः ॥

பூமௌ ஸ்திதஸ்ய ராமஸ்ய ரதஸ்தஸ்ய ச ரக்ஷஸ: ।
ந ஸமம் யுத்தமிதி ஆஹு: தேவ கந்தர்வ தானவா: ॥

தேவ கந்தர்வ தானவா:	-தேவர்கள், கந்தர்வர்கள், அஸுரர்கள்
பூமௌ	- பூமியில்
ஸ்திதஸ்ய	- நின்று கொண்டிருக்கும்
ராமஸ்ய	- ஸ்ரீராமருக்கும்
ரதஸ்தஸ்ய	- ரதத்தில் வீற்றிருக்கும்

ரக்ஷஸ: ச - அரக்கனுக்கும்
யுத்தம் - போரானது
ஸமம் ந - பொருத்தமில்லை
இதி ஆஹு: - என்று சொன்னார்கள்.

ततः काञ्चनचित्राङ्गः किकिणीशतभूषितः ।
तरुणादित्यसंकाशो वैदूर्यमयकूबरः ॥

தத: காஞ்சன சித்ராங்க: கிங்கிணீஶத பூஷித: ।
தருணாதித்ய ஸங்காஶோ வைடூர்ய மய கூபர: ॥ 7

सदश्वैः काञ्चनापीडैर्युक्तः श्वेतप्रकीर्णकैः ।
हरिभिः सूर्यसंकाशैर्हेमजालविभूषितैः ॥
रुक्मवेणुध्वजः श्रीमान् देवराजरथो वरः ॥

ஸதஶ்வை: காஞ்சனாபீடை: யுக்த: ஶ்வேத ப்ரகீர்ணகை: ।
ஹரிபி: ஸூர்யஸங்காஶைர் ஹேமஜால விபூஷிதை: ॥
ருக்மவேணுத்வஜ: ஶ்ரீமான் தேவராஜரதோ வர: ॥ 8

தேவராஜரத: - தேவேந்திரனது ரதமானது
காஞ்சன சித்ராங்க: - பொன்னாலிழைக்கப் பெற்ற உருக்கொண்டது;
கிங்கிணீ ஶத பூஷித: - பல சதங்கைகளால் அலங்கரிக்கப்பட்டது;
தருணாதித்ய ஸங்காஶ: - பாலசூரியனை நிகர்த்தது;
வைடூர்ய மய கூபர: - வைடூர்யக்கற்களாலிழைக்கப்பெற்ற ஏற்காலுடையது;
காஞ்சனா பீடை: - பொன் தலையணியுற்றவைகளும்
ஶ்வேத ப்ரகீர்ணகை:- வெண்சாமரங்கள் பூண்டவைகளும்
ஸூர்ய ஸங்காஶை: - சூரியனை நிகர்த்தவைகளும்
ஹரிபி: - பசுமை நிறமுள்ளவைகளும்
ஹேம ஜால விபூஷிதை:- பொன்மாலைகள் சூடப் பெற்றவைகளுமான
ஸதஶ்வை: - சிறந்த குதிரைகளால்
யுக்த: - பூட்டப் பெற்றது;
தத: - அதனால்
ஶ்ரீமான் - மிக்க அழகுற்றது;
ருக்ம வேணுத்வஜ: - தங்கக்கம்பங்கொண்ட கொடியுடையது;
வர: - மிகச் சிறந்தது.

देवराजेन संदिष्टो रथमारुह्य मातलिः ।
अभ्यवर्तत काकुस्थमवतीर्य त्रिविष्टपात् ॥

தேவராஜனே ஸந்திஷ்டோ ரதம் ஆருஹ்ய மாதலி: ।
அப்யவர்தத காகுத்ஸ்தமவதீர்ய த்ரிவிஷ்டபாத் ॥ 9

மாதலி:	-	மாதலி
தேவராஜேன	-	தேவேந்திரனால்
ஸந்திஷ்ட:	-	ஆக்ஞாபிக்கப்பட்டவனாய்
ரதம்	-	அந்த ரதத்தில்
ஆருஹ்ய	-	ஏறிக்கொண்டு
த்ரிவிஷ்டபாத்	-	விண்ணுலகினின்று
அவதீர்ய	-	இறங்கி
காகுத்ஸ்தம்	-	ஸ்ரீராமரை
அப்யவர்தத	-	கிட்டிவந்தான்.

अब्रवीच्च तदा रामं सप्रतोदो रथे स्थितः ।

प्राञ्जलिर्मातलिर्वाक्यं सहस्राक्षस्य सारथिः ॥

அப்ரவீத் ச ததா ராமம் ஸப்ரதோதோ ரதே ஸ்தித: ।
ப்ராஞ்ஜலிர் மாதலிர் வாக்யம் ஸஹஸ்ராக்ஷஸ்ய ஸாரதி: ॥ 10

ஸஹஸ்ராக்ஷஸ்ய	-	இந்திரனுடைய
ஸாரதி:	-	சாரதியான
மாதலி:	-	மாதலி
ஸப்ரதோத:	-	சவுக்கைகக்கொண்டவனாய்
ரதே	-	தேரில்
ஸ்தித: ச	-	இருந்து கொண்டு
ததா	-	அப்பொழுது
ராமம்	-	ஸ்ரீராமரைப் பார்த்து
ப்ராஞ்ஜலி:	-	அஞ்சலிஹஸ்தனாய்
வாக்யம்	-	விண்ணப்பமொன்றை
அப்ரவீத்	-	பின்வருமாறு தெரிவித்துக் கொண்டான்.

सहस्राक्षेण काकुत्स्थ रथोऽयं विजयाय ते ।

दत्तस्तव महासत्त्व श्रीमञ्शत्रुनिबर्हण ॥

ஸஹஸ்ராக்ஷேண காகுத்ஸ்த ரதோऽயம் விஜயாய தே ।
தத்தஸ்தவ மஹாஸத்வ ஸ்ரீமன் ஶத்ருநிபர்ஹண ॥ 11

इदमैन्द्रं महच्चापं कवचं चाग्निसंनिभम् ।

शराश्चादित्यसंकाशाः शक्तिश्च विमला शिता ॥

இதமைந்த்ரம் மஹத்சாபம் கவசம் ச அக்நிஸந்நிபம் ।
ஶராஸ் ச ஆதித்ய ஸங்காஶா: ஶக்திஶ் ச விமலா ஶிதா ॥ 13

ஶத்ருநிபர்ஹண	-	சத்ருக்களை சங்கரிக்கும்
மஹாஸத்வ	-	பேராற்றல் கொண்ட
ஸ்ரீமன்	-	ஸ்ரீமிகும்
காகுத்ஸ்த	-	ஸ்ரீராம

தே	தேவரீரது
விஜயாய	வெற்றிக்காக
ஸஹஸ்ராக்ஷேண	இந்திரனால்
அயம் ரத:	இந்த ரதமான
தவ	தேவரீருக்கு
தத்த	அளிக்கப்பட்டிருக்கிறது ;
மஹத்	மகிமை மிகுந்த
ஐந்த்ரம்	இந்திரனது
இதம் சாபம்	இந்த வில்லும்
அக்நி ஸந்நிபம்	அக்னியை நிகர்த்த
கவசம் ச	கவசமும்,
ஆதித்ய ஸங்காஶா:	சூரியனை நிகர்த்த
ஶரா: ச	பாணங்களும்
விமலா	நிர்மலமானதும்
ஶிதா	கூரியதுமான
ஶக்தி:	சக்தியும்
ச	அப்படியே அளிக்கப்பட்டிருக்கின்றன.

आरुह्येमं रथं वीर राक्षसं जहि रावणम् ।
मया सारथिना राजन् महेन्द्र इव दानवान् ॥

ஆருஹ்யேமம் ரதம் வீர ராக்ஷஸம் ஜஹி ராவணம் ।
மயா ஸாரதிநா ராஜன் மஹேந்த்ர இவ தானவான் ॥ 13

வீர	வீரரான
ராஜன்	சக்ரவர்த்தியே !
இமம் ரதம்	இந்த ரதத்தில்
ஸாரதிநா	சாரதியான
மயா	என்னுடன்
ஆருஹ்ய	வீற்றிருந்து
மஹேந்த்ர:	தேவேந்திரர்
தானவான்	அஸுரர்களை
இவ	வெற்றி கொள்வது போல்
ராக்ஷஸம்	அரக்கனான
ராவணம்	ராவணனை
ஜஹி	வெற்றி கொள்வீராக.

इत्युक्तः संपरिक्रम्य रथं समभिवाद्य च ।
आरुरोह तदा रामो लोकाँल्लक्ष्म्या विराजयन् ॥

இதி உக்த: ஸம்பரிக்ரம்ய ரதம் ஸமபிவாத்ய ச ।
ஆருரோஹ ததா ராமோ லோகான் லக்ஷ்ம்யா விராஜயன் ॥ 14

இதி	மேற்கண்டவாறு
உக்த: ததா	தெரிவிக்கப்பட்ட பொழுது
லக்ஷ்ம்யா	திருவால்
லோகான்	உலகங்களை
விராஜயன்	விளங்கச் செய்பவரான
ராம:	ஸ்ரீராமர்
ரதம்	ரதத்தை
ஸம்பரிக்ரம்ய	வலம் வந்து
ஸமபிவாத்ய ச	நமஸ்கரித்து விட்டு
ஆருரோஹ	ஏறிக்கொண்டார்.

तद्बभूवाद्भुतं युद्धं द्वैरथं रोमहर्षणम् ।
रामस्य च महाबाहो रावणस्य च रक्षसः ॥

தத் பபூவாத்புதம் யுத்தம் த்வைரதம் ரோமஹர்ஷணம் ।
ராமஸ்ய ச மஹாபாஹோ ராவணஸ்ய ச ரக்ஷஸ: ॥ 15

மஹாபாஹோ:	வீரரான
ராமஸ்ய ச	ஸ்ரீராமருக்கும்
ரக்ஷஸ:	அரக்கனான
ராவணஸ்ய ச	ராவணனனுக்கும்
த்வைரதம்	இரு ரதங்களைக் கொண்ட
தத்	அந்த
யுத்தம்	போரானது
ரோம ஹர்ஷணம்	மயிர்க்கூச்செறிவிப்பதாய்
அத்புதம்	ஆச்சரியகரமாய்
பபூவ	இருந்தது.

स गान्धर्वेण गान्धर्वं दैवं दैवेन राघवः ।
अस्त्रं राक्षसराजस्य जघान परमास्त्रंवित् ॥

ஸ காந்தர்வேண காந்தர்வம் தைவம் தைவேன ராகவ: ।
அஸ்த்ரம் ராக்ஷஸ ராஜஸ்ய ஜகான பராமஸ்த்ரவித் ॥ 16

பராமஸ்த்ரவித்	சிறந்த அஸ்திரங்களையுணர்ந்தவரான
ஸ: ராகவ:	அந்த ஸ்ரீராமர்
ராக்ஷஸ ராஜஸ்ய	ராக்ஷஸமன்னனின்
காந்தர்வம் அஸ்த்ரம்	கந்தர்வாஸ்திரத்தை
காந்தர்வேண	கந்தர்வாஸ்திரத்தாலும்
தைவம்	தேவாஸ்திரத்தை
தைவேன	தேவாஸ்திரத்தாலும்
ஜகான	தடுத்தார்.

अस्त्रं तु परमं घोरं राक्षसं राक्षसाधिपः ।
ससर्ज परमक्रुद्धः पुनरेव निशाचरः ॥

அஸ்த்ரம் து பரமம் கோரம் ராக்ஷஸம் ராக்ஷஸாதிப: ।
ஸஸர்ஜ பரமக்ருத்த: புனரேவ நிசாஶர: ॥ 17

நிசாஶர:	-	அரக்கனான
ராக்ஷஸாதிப:	-	ராக்ஷஸமன்னன்
து	-	அப்பொழுது
பரமக்ருத்த:	-	மிகச்சினங்கொண்டு
பரமம் கோரம்	-	மிகக் கொடிய
ராக்ஷஸம் அஸ்த்ரம்	-	ராக்ஷஸாஸ்திரத்தை
புன: ஏவ	-	மீளவும்
ஸஸர்ஜ	-	விடுத்தான்.

ते रावणधनुर्मुक्ताः शराः काञ्चनभूषणाः ।
अभ्यवर्तन्त काकुत्स्थं सर्पा भूत्वा महाविषाः ॥

தே ராவண தநுர்முக்தா: ஶரா: காஞ்சன பூஷணா: ।
அப்யவர்தந்த காகுத்ஸ்தம் ஸர்பா பூத்வா மஹாவிஷா: ॥ 18

ராவண தநுர்முக்தா:	-	ராவணனது தனுஸினின்று விடுக்கப்பட்டவைகளும்
காஞ்சன பூஷணா:	-	பொன்பூஷணங்களுற்றவைகளுமான
தே ஶரா:	-	அந்த பாணங்கள்
மஹாவிஷா:	-	கொடுவிஷங் கொண்ட
ஸர்பா: பூத்வா	-	ஸர்ப்பங்களாகி
காகுத்ஸ்தம்	-	காகுஸ்தரை
அப்யவர்தந்த	-	எதிர்த்துச் சென்றன.

ते दीप्तवदना दीप्तं वमन्तो ज्वलनं मुखैः ।
राममेवाभ्यवर्तन्त व्यादितास्या भयानकाः ॥

தே தீப்தவதநா தீப்தம் வமந்தோ ஜ்வலனம் முகை: ।
ராமமேவாப்யவர்தந்த வ்யாதிதாஸ்யா பயானகா: ॥ 19

தீப்தவதநா:	-	ஜ்வலிக்கும் முகங்குளுற்றவைகளும்
வ்யாதிதாஸ்யா:	-	வாயை பிளந்தவைகளும்
தீப்தம்	-	ஜ்வலிக்கும்
ஜ்வலனம்	-	அழலை
முகை:	-	முகங்களால்
வமந்த:	-	கக்குபவைகளும்
பயானகா:	-	பயங்கரமானவைகளுமான
தே	-	அவைகள்
ராமம் ஏவ	-	ஸ்ரீராமரை
அப்யவர்தந்த	-	எதிர்த்துச் சென்றன.

तैर्वासुकिसमस्पर्शैर्दीप्तभोगैर्महाविषैः ।
दिशश्च संतताः सर्वाः प्रदिशश्च समावृताः ॥

தை: வாஸுகி ஸமஸ்பர்ஶை: தீப்த போகை: மஹாவிஷை: ।
திஶஶ் ச ஸந்ததா: ஸர்வா: ப்ரதிஶஶ் ச ஸமாவ்ருதா: ॥ 20

வாஸுகி ஸமஸ்பர்ஶை:	வாஸுகியை நிகர்த்த வலுக்கொண்டவைகளும்
தீப்த போகை:	ஜ்வலிக்கும் படங்களுற்றவைகளும்
மஹாவிஷை:	கொடு விஷமமைந்தவைகளுமான
தை:	அவைகளால்
திஶ:	திக்குகள்
ஸர்வா: ச	எல்லாமும்
ஸந்ததா:	நிரம்பி விட்டன;
ப்ரதிஶ: ச	விதிக்குகளும்
ஸமாவ்ருதா:	மூடுண்டன.

तान् दृष्ट्वा पन्नगान् रामः समापतत आहवे ।
अस्त्रं गारुत्मतं घोरं प्रादुश्चक्रे भयावहम् ॥

தான் த்ருஷ்ட்வா பன்னகான் ராம: ஸமாபதத ஆஹவே ।
அஸ்த்ரம் காருத்மதம் கோரம் ப்ராதுஶ்சக்ரே பயாவஹம் ॥ 21

ராம:	ஸ்ரீராமர்
தான்	அந்த
பன்னகான் த்ருஷ்ட்வா	ஸர்ப்பங்களைப் பார்த்து
ஆஹவே	போரில்
ஸமாபதத	துள்ளியெழுந்தார்;
கோரம்	கொடியதும்
பயாவஹம்	பயத்தை தருவதுமான
காருத்மதம் அஸ்த்ரம்	காருட அஸ்திரத்தை
ப்ராதுஶ்சக்ரே	பிரயோகித்தார்.

ते राघवशरा मुक्ता रुक्मपुंखाः शिखिप्रभाः ।
सुपर्णाः काञ्चना भूत्वा विचेरुः सर्पशत्रवः ॥

தே ராகவஶரா முக்தா ருக்மபுங்கா: ஶிகிப்ரபா: ।
ஸுபர்ணா: காஞ்சநா பூத்வா விசேரு: ஸர்பஶத்ரவ: ॥ 22

முக்தா:	விடுக்கப்பெற்றவைகளும்
ருக்மபுங்கா:	பொன்முனைகளுற்றவைகளும்
ஶிகிப்ரபா:	அக்னி ஒளி கொண்டவைகளுமான
தே	அந்த
ராகவஶரா:	ஸ்ரீராமபாணங்கள்

காஞ்சநா:	பொன்
ஸுபர்ணா:	கருடர்களாய்
பூத்வா	ஆகி
ஸர்ப ஶத்ரவ:	ஸர்ப்பங்களுக்கு சத்ருக்களாகி
விசேரு:	திரிந்தன.

ते तान् सर्वाञ्शराञ्जघ्नुः सर्परूपान् महाजवान् ।
सुपर्णरूपा रामस्य विशिखाः कामरूपिणः ॥

தே தான்ஸர்வான் ஶரான் ஜக்நு: ஸர்பரூபான் மஹாஜவான் ।
ஸுபர்ணரூபா ராமஸ்ய விஶிகா: காமரூபிண: ॥ 23

ராமஸ்ய	ஸ்ரீராமரது
காமரூபிண:	நினைத்தரூபமெடுக்க வல்லவைகளும்
ஸுபர்ணரூபா:	கருட உருக் கொண்டவைகளுமான
தே விஶிகா:	அந்த பாணங்கள்
தான்	அந்த
மஹாஜவான்	சக்தி மிக்கவைகளும்
ஸர்பரூபான்	ஸர்ப்ப உருக் கொண்டவைகளுமான
ஶரான்	பாணங்கள்
ஸர்வான்	எல்லாவற்றையும்
ஜக்நு:	அழித்து விட்டன.

अस्त्रे प्रतिहते क्रुद्धो रावणो राक्षसाधिपः ।
अभ्यवर्षत्तदा रामं घोराभिः शरवृष्टिभिः ॥

அஸ்த்ரே ப்ரதிஹதே க்ருத்தோ ராவணோ ராக்ஷஸாதிப: ।
அப்யவர்ஷத்ததா ராமம் கோராபி: ஶரவ்ருஷ்டிபி: ॥ 24

ராக்ஷஸாதிப:	ராக்ஷஸமன்னனான
ராவண:	ராவணன்
ததா	அப்பொழுது
அஸ்த்ரே	அஸ்திரம்
ப்ரதிஹதே	அழிந்தவளவில்
க்ருத்த:	கோபங்கொண்டவனாய்
ராமம்	ஸ்ரீராமரை
கோராபி:	கொடியசரவர்ஷங்களால்
ஶரவ்ருஷ்டிபி:	சரவர்ஷங்களால்
அப்யவர்ஷத்	வரிஷித்தான்.

ततः शरसहस्रेण राममक्लिष्टकारिणम् ।
अर्दयित्वा शरौघेण मातलिं प्रत्यविध्यत ॥

தத: ஶரஸஹஸ்ரேண ராமம் ஆக்லிஷ்டகாரிணம் ।
அர்தயித்வா ஶரௌகேண மாதலிம் ப்ரத்யவித்யத ॥ 25

தத:	-	அப்பொழுது
ஶரஸஹஸ்ரேண	-	அநேக பாணங்களால்
அக்லிஷ்டகாரிணம்	-	எதையுமே அனாயாஸமாய்ச் செய்யவல்ல
ராமம்	-	ஶ்ரீராமரை
அர்தயித்வா	-	புடைத்துவிட்டு
ஶரௌகேண	-	சரமாரியால்
மாதலிம்	-	மாதலியை
ப்ரத்யவித்யத	-	தாக்கினான்.

चिच्छेद केतुमुद्दिश्य शरेणैकेन रावणः ॥

சிச்சேத கேதுமுத்திஶ்ய ஶரேணைகேந ராவண: । 26

ராவண:	-	ராவணன்
ஏகேந ஶரேண	-	ஒரே பாணத்தால்
இந்த்ரஸ்ய கேதும்	-	இந்திரனது கொடியை
சிச்சேத	-	துண்டித்தெறிந்தான்.

पातयित्वा रथोपस्थे रथात् केतुं च काञ्चनम् ।
ऐन्द्रानपि जघानाश्वाञ्छरजालेन रावणः ॥

பாதயித்வா ரதோபஸ்தே ரதாத்கேதும் ச காஞ்சனம் ।
ஐந்தரான் அபி ஜகான அஶ்வான் ஶரஜாலேன ராவண: ॥ 27

ராவண:	-	ராவணன்
ரதாத்	-	ரதத்திலிருந்து
ரதோபஸ்தே	-	ரதத்தின் நடுவில்
காஞ்சனம்	-	பொன்மயமான
கேதும் ச	-	கொடியையும்
பாதயித்வா	-	வீழ்த்திவிட்டு
ஶரஜாலேன	-	இடைவிடாத அம்புவீச்சால்
ஐந்தரான்	-	இந்திரனது
அஶ்வான் அபி	-	குதிரைகளையும்
ஜகான	-	தாக்கினான்.

तद्दृष्ट्वा सुमहत् कर्म रावणस्य दुरात्मनः ।
विषेदुर्देवगन्धर्वा दानवाश्चारणैः सह ॥

தத் த்ருஷ்ட்வா ஸுமஹத் கர்ம ராவணஸ்ய துராத்மன: ।
விஷேதுர் தேவ கந்தர்வா தானவாஶ்சாரணை: ஸஹ ॥ 28

சாரணை: ஸஹ	-	சாரணர்களோடு கூட
தேவ கந்தர்வா:	-	தேவர்களும், கந்தர்வர்களும்,
தானவா:	-	அஸுரர்களும்
துராத்மன:	-	துராத்மாவான

ராவணஸ்ய - ராவணனது
தத் - அந்த
ஸுமஹத் கர்ம - கொடும் செயலை
த்ருஷ்ட்வா - பார்த்து
விஷேது: - துயரங்கொண்டனர்.

राममार्तं तदा दृष्ट्वा सिद्धाश्च परमर्षयः ।
व्यथिता वानरेन्द्राश्च बभूवुः सविभीषणाः ॥

ராமம் ஆர்தம் ததா த்ருஷ்ட்வா ஸித்தாஶ்ச பரமர்ஷய: ।
வ்யதிதா: வாநரேந்தராஶ்ச பபூவு: ஸவிபீஷணா: ॥ 29

ததா - அப்பொழுது
ஸ விபீஷணா: - விபீஷணனுள்ளிட்ட
வாநரேந்தரா: ச - வானரோத்தமர்களும்
ஸித்தா: - சித்தர்களும்
பரமர்ஷய: ச - மஹர்ஷிகளும்
ராமம் - ஸ்ரீராமரை
ஆர்தம் - பீடிக்கப்பட்டவராய்
த்ருஷ்ட்வா - கண்டு
வ்யதிதா: பபூவு: - கொதித்தனர்.

रामचन्द्रमसं दृष्ट्वा ग्रस्तं रावणराहुणा ।
प्राजापत्यं च नक्षत्रं रोहिणीं शशिनः प्रियाम् ॥
समाक्रम्य बुधस्तस्थौ प्रजानामशुभावहः ॥

ராமசந்த்ரமஸம் த்ருஷ்ட்வா க்ரஸ்தம் ராவணராஹுணா ।
ப்ராஜாபத்யம் ச நக்ஷத்ரம் ரோஹிணீம் ஶஶின: ப்ரியாம் ॥
ஸமாக்ரம்ய புதஸ்தஸ்தௌ ப்ரஜாநாம் அஶுபாவஹ: ॥ 30

ராவணராஹுணா - ராவணனாகிற ராகுவால்
ராமசந்த்ரமஸம் - ஸ்ரீராமராகிய சந்திரனை
க்ரஸ்தம் - பீடிக்கப்பட்டதாய்
த்ருஷ்ட்வா - கண்டு
புத: - புதன்,
ப்ராஜா பத்யம் - பிராஜாபத்ய
நக்ஷத்ரம் - நக்ஷத்திரத்தையும்
ஶஶின: - சந்திரனுக்கு
ப்ரியாம் - பிரியையான
ரோஹிணீம் ச - ரோகிணி நக்ஷத்திரத்தையும்
ஸமாக்ரம்ய - தீண்டி
ப்ரஜாநாம் - பிரஜைகளுக்கு
அஶுபாவஹ: - தீமையை விளைவிப்பவனாய்
தஸ்தௌ - இருந்தான்.

सधूमपरिवृत्तोर्मिः प्रज्वलन्निव सागरः ।
उत्पपात तदा क्रुद्धः स्पृशन्निव दिवाकरम् ॥

ஸதூம பரிவ்ருத்தோர்மி: ப்ரஜ்வலன் இவ ஸாகர: ।
உத்பபாத ததா க்ருத்த: ஸ்ப்ருஶன் இவ திவகாரம்॥ 31

ததா - அப்பொழுது
ஸாகர: - சமுத்திரம்
ஸதூமபரிவ்ருத்தோர்மி:-புகையுடனெழும் அலை கொண்டதாய்
இவ - முற்றும்
ப்ரஜ்வலத் - கொதிப்பாய்
க்ருத்த: - கொந்தளித்து
திவகாரம் - சூரியனை
ஸ்ப்ருஶன் இவ - தொடுவது போல
உத்பபாத - உயரக் கிளம்பியது.

शस्त्रवर्णः सुपरुषो मन्दरश्मिर्दिवाकरः ।
अदृश्यत कबन्धाङ्कः संसक्तो धूमकेतुना ॥

ஶஸ்த்ரவர்ண: ஸுபுருஷோ மந்தரஶ்மிர் திவாகர: ।
அத்ருஶ்யத கபந்தாங்க: ஸம்ஸக்தோ தூமகேதுநா ॥ 32

திவாகர: - சூரியன்
தூம கேதுநா - தூதுகேதுவால்
ஸம்ஸக்த: - பீடிக்கப்பட்டவனாய்
ஶஸ்த்ர வர்ண: - ஆயுத வர்ணம் கொண்டவனாகவும்
ஸுபருஷ: - பயங்கரனாகவும்
மந்தரஶ்மி: - ஒளிமங்கியவனாகவும்
கபந்தாங்க: - முண்டத்தைக் களங்மாகக் கொண்டவனாகவும்
அத்ருஶ்யத - காணப்பட்டான்.

कोसलानां च नक्षत्रं व्यक्तमिन्द्राग्निदैवतम् ।
आक्रम्याङ्गारकस्तस्थौ विशाखामिव चाम्बरे ॥

கோஸலானாம் ச நக்ஷத்ரம் வ்யக்தம் இந்த்ராக்நி தைவதம் ।
ஆக்ரம்யாங்காரக: தஸ்தௌ விஶாகாமபி ச அம்பரே ॥ 33

அங்காரக: ச - செவ்வாயும்
இந்த்ராக்நி தைவதம்- இந்திரயையும், அக்னியையும் தேவதையாக கொண்டதும்
வ்யக்தம் - தெளிவானதும்
கோஸலானாம் - கோசல தேசத்தவர்களுக்கு (இஷ்வாகு மன்னர்களுக்கு)

நக்ஷத்ரம் ச	-	குலநக்ஷத்திரமாகியதுமான
விஶாகாம் அபி	-	விசாக நக்ஷத்திரத்தையும்
அம்பரே	-	ஆகாயத்தில்
ஆக்ரம்ய	-	தீண்டி
தஸ்தௌ	-	நின்றான்.

दशास्यो विशतिभुजः प्रगृहीतशरासनः ।
अदृश्यत दशग्रीवो मैनाक इव पर्वतः ॥
தஶாஸ்யோ விம்ஶதிபுஜ: ப்ரக்ருஹீத ஶராஸ்ந: ।
அத்ருஶ்யத தஶக்ரீவோ மைநாக இவ பர்வத: ॥ 34

தஶக்ரீவ:	-	ராவணன்
தஶாஸ்ய:	-	பத்துத்தலைகள் கொண்டவனாய்
விம்ஶதிபுஜ:	-	இருபது கைகளுற்றவனாய்
ப்ரக்ருஹீத ஶராஸந:	-	வில்லைக்கையிலேந்தியவனாய்
மைநாக:	-	மைனாக
பர்வத:	-	பர்வதம்
இவ	-	போன்றவனாய்
அத்ருஶ்யத	-	காணப்பட்டான்.

निरस्यमानो रामस्तु दशग्रीवेण रक्षसा ।
नाशक्नोदभिसंधातुं सायकान् रणमूर्धनि ॥
நிரஶ்யமாநோ ராமஸ்து தஶக்ரீவேண ரக்ஷஸா ।
நா ஶக்நோத் அபிஸந்தாதும் ஸாயகான் ரணமூர்தனி ॥ 35

ராம:	-	ஸ்ரீராமர்
து	-	அப்பொழுது
ரக்ஷஸா	-	அரக்கனான
தஶக்ரீவேண	-	தசகண்டனால்
நிரஶ்யமாந:	-	எய்யப்படுபவராய்
ரணமூர்தனி	-	போர் முனையில்
ஸாயகான்	-	பாணங்களை
அபிஸந்தாதும்	-	தொடுக்க
அஶக்நோத் ந	-	முடியவில்லை.

स कृत्वा भ्रुकुटिं क्रुद्धः किञ्चित् संरक्तलोचनः ।
जगाम सुमहाक्रोधं निर्दहन्निव चक्षुषा ॥
ஸ க்ருத்வா ப்ருகுடிம் க்ருத்த: கிஞ்சித் ஸம்ரக்த லோசன: ।
ஜகாம ஸுமஹாக்ரோதம் நிர்தஹன் இவ சக்ஷுஷா ॥ 36

க்ருத்த:	-	கோபங்கொண்டிருந்த
ஸ:	-	அவர் (ஸ்ரீராமர்)

கிஞ்சித் ஸம்ரக்த லோசன:-சிறிது சிவந்த கண்களுற்றவராய்

ப்ரகுடிம் க்ருத்வா	-	புருவம் நெறித்து
சக்ஷுஷா	-	பார்வையால்
நிர்தஹன் இவ	-	எரித்துவிடுபவர் போல
ஸுமஹா க்ரோதம்	-	மிகக்கடுஞ்சினம்
ஜகாம	-	கொண்டார்.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே சதுர்விம்ஶதி
ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் யுத்த காண்டே
ஐந்த்ரரதகேது பாதநம் நாம த்ரய்யுத்தரஶததம: ஸர்க: ॥

சதுருத்தர ஶததம: ஸர்க: - 104

तस्य क्रुद्धस्य वदनं दृष्ट्वा रामस्य धीमतः ।
सर्वभूतानि वित्रेसुः प्राकम्पत च मेदिनी ॥

தஸ்ய க்ருத்தஸ்ய வதனம் த்ருஷ்ட்வா ராமஸ்ய தீமத: ।
ஸர்வபூதானி வித்ரேஸு: ப்ராகம்பத ச மேதனீ॥ 1

க்ருத்தஸ்ய	- கோபங்கொண்ட
தஸ்ய	- அந்த
தீமத:	- தீமானான
ராமஸ்ய	- ஸ்ரீராமரதுது
வதனம்	- முகத்தை
த்ருஷ்ட்வா	- பார்த்து
ஸர்வபூதானி	- எல்லாப் பிராணிகளும்
வித்ரேஸு:	- மருண்டன;
மேதினீ ச	- பூமியும்
ப்ராகம்பத	- அதிர்ந்தது.

सिंहशार्दूलवाञ्शैलः संचचाल चलद्रुमः ।

ஸிம்ஹ ஶார்தூலவாஞ்ஶைல: ஸஞ்சசால சலத்ரும: । 2
ஸிம்ஹ ஶார்தூலவான்-சிம்மங்களும், வேங்கைகளும் வஸிக்கும்

ஶைல:	- மலையும்
சலத்ரும:	- அசைந்தாடும் மரங்களுற்றதாய்
ஸஞ்சசால	- அதிர்ந்தது.

बभूव चातिक्षुभितः समुद्रः सरितां पतिः ॥

பபூவ ச அதிக்ஷுபித: ஸமுத்ர: ஸரிதாம் பதி: ॥ 3

ஸரிதாம் பதி:	- நதிகளுக்கு நாயகனான
ஸமுத்ர: ச	- சமுத்திரமும்
அதிக்ஷுபித:	- மிகக்கலக்கமுற்றதாக
பபூவ	- ஆயிற்று.

खगाश्च खरनिर्घोषा गगने परुषा घनाः ।
औत्पातिकानि नर्दन्तः समन्तात् परिचक्रमुः ॥

ககாஶ் ச கரநிர்கோஷா ககனே பருஷா கநா: ।
ஔத்பாதிகானி நர்தந்த: ஸமந்தாத் பரிசக்ரமு: ॥ 4

கரநிர்கோஷா:	- கடோரமான ஒலி கொண்ட
ககா:	- பறவைகளும்
பருஷா:	- குரூரமான

கநா: ச	மேகங்களும்
ககனே	ஆகாயத்தில்
ஔத்பாதிகானி	தீயநிமித்தங்களை
நர்தந்த:	ஒலிக்கின்றனவாய்
ஸமந்தாத்	நாற்புறமும்
பரிசக்ரமு:	சஞ்சரித்தன.

रामं दृष्ट्वा सुसंक्रुद्धमुत्पातांश्च सुदारुणान् ।
वित्रेसुः सर्वभूतानि रावणस्याभवद्भयम् ॥

ராமம் த்ருஷ்ட்வா ஸுஸங்க்ருத்தம் உத்பாதாம்ஶ் ச ஸுதாருணான்।
வித்ரேஸு: ஸர்வபூதானி ராவணஸ்யாபவத் பயம் ॥ 5

ராமம்	ஸ்ரீராமரை
ஸுஸங்க்ருத்தம்	கோபங்கொண்டவராகவும்
ஸுதாருணான்	மிகக்கொடிய
உத்பாதான் ச	உத்பாதங்களையும்
த்ருஷ்ட்வா	பார்த்து
ஸர்வ பூதானி	எல்லாப் பிராணிகளும்
வித்ரேஸு:	நடுக்கமுற்றன;
ராவணஸ்ய	ராவணனுக்கும்
பயம்	திகில்
அபவத்	உண்டாயிற்று.

विमानस्थास्तदा देवगन्धर्वाश्च महोरगाः ।
ऋषिदानवदैत्याश्च गरुत्मन्तश्च खेचराः ॥

விமானஸ்தாஸ் ததா தேவா கந்தர்வாஶ்ச மஹோரகா: ।
ரிஷிதானவ தைத்யாஶ்ச கருத்மந்தஶ்ச கேசரா: ॥ 6

ददृशुस्ते महायुद्धं लोकसंवर्तसंस्थितम् ।
नानाप्रहरणैर्भीमैः शूरयोः संप्रयुध्यतोः ॥

தத்ருஶுஸ் தே மஹாயுத்தம் லோக ஸம்வர்த ஸம்ஸ்திதம ।
நாநா ப்ரஹரணைர் பீமை: ஶூரயோ: ஸம்ப்ரயுத்யதோ: ॥ 7

ததா	அப்பொழுது
விமானஸ்தா:	விமானத்திலிருக்கும்
தே	அந்த
தேவா:	தேவர்களும்
கந்தர்வா: ச	கந்தவர்களும்
மஹோரகா:	மகோரகர்களும்
ரிஷிதானவ தைத்யா: ச	ரிஷிகளும், தானவர்களும், தைத்யர்களும்
கேசரா:	வானில் ஸஞ்சரிக்கும்

கருத்மந்த: ச	பறவைகளும்
ததா	அப்பொழுது
பீமை:	பயங்கரமான
நாநாப்ரஹரணை:	பலவித ஆயுதங்களைக் கொண்டு
ஸம்ப்ரயுத்யதோ:	போரிடும்
ஸுரயோ:	வீரர்களான அவ்விருவர்களுடைய
லோக ஸம்வர்த ஸம்ஸ்திதம்	பிரளயத்தை ஒத்திருக்கும்
யுத்தம்	யுத்தத்தை
தத்ருஶு:	கண்டார்கள்.

ऊचुः सुरासुराः सर्वे तदा विग्रहमागताः ।
प्रेक्षमाणा महद्युद्धं वाक्यं भक्त्या प्रहृष्टवत् ॥

ஊசு: ஸுராஸுரா: ஸர்வே ததா விக்ரஹமாகதா: ।
ப்ரேக்ஷமாணா மஹத்யுத்தம் வாக்யம் பக்த்யா ப்ரஹ்ருஷ்டவத் ॥ 8

ததா	அப்பொழுது
ஸுராஸுரா: ஸர்வே	தேவர்கள், அஸுரர்கள் யாவரும்
விக்ரஹம்	போருக்கு
ஆகதா:	அணுகி நின்றவர்களாய்
மஹத்	பெரும்
யுத்தம்	யுத்தத்தை
ப்ரேக்ஷமாணா:	பார்க்கின்றவர்களாய்
பக்த்யா	பக்தியுடன்
ப்ரஹ்ருஷ்டவத்	உத்ஸாஹத்தை விளக்குவதாய்
வாக்யம்	சொல் ஒன்றை
ஊசு:	கூறினார்கள்.

दशग्रीवं जयेत्याहुरसुराः समवस्थिताः ।

தஶக்ரீவம் ஜயேத்யாஹு: அஸுரா: ஸமவஸ்திதா: । 9

அஸுரா:	அஸுரர்கள்
ஸமவஸ்திதா:	உத்ஸாஹங்கொண்டவர்களாய்
தஶக்ரீவம்	ராவணனைப் பார்த்து
ஜய	"நீ வெற்றி பெறுவாயாக"
இதி	என்று
ஆஹு:	மொழிந்தார்கள்.

देवा राममथोचुस्ते त्वं जयेति पुनः पुनः ॥

தேவா ராமம் அத ஊசுஸ்: தே த்வம் ஜயேதி புன: புன: ॥ 10

அத	அப்பொழுது
தே	அந்த

தேவா - தேவர்கள்
ராமம் - ஸ்ரீராமரைப் பார்த்து
த்வம் - தேவரீர்
ஜய - வெற்றி பெறுவீராக
இதி - என்று
புன: புன: - மீண்டும் மீண்டும்
ஊசு: - மொழிந்தார்கள்.

एतस्मिन्नन्तरे क्रोधाद्राघवस्य स रावणः ।
प्रहर्तुकामो दुष्टात्मा स्पृशन् प्रहरणं महत् ॥

ஏதஸ்மின் அந்தரே க்ரோதாத் ராகவஸ்ய ஸ ராவண: ।
ப்ரஹர்துகாமோ துஷ்டாத்மா ஸ்ப்ருஶன் ப்ரஹரணம் மஹத் ॥ 11

वज्रसारं महानादं सर्वशत्रुनिबर्हणम् ।
शैलशृङ्गनिभैः कूटैश्चितं दृष्टिभयावहम् ॥

வஜ்ரஸாரம் மஹாநாதம் ஸர்வஶத்ரு நிபர்ஹணம் ।
ஶைல ஶ்ருங்க நிபை: கூடைஶ்சிதம் த்ருஷ்டி பயாவஹம் ॥ 12

सधूममिव तीक्ष्णाग्रं युगान्ताग्निचयोपमम् ।
अतिरौद्रमनासाद्यं कालेनापि दुरासदम् ॥

ஸதூமம் இவ தீக்ஷ்ணாக்ரம் யுகாந்தாக்நிசயோபமம் ।
அதிரெளத்ரமநாஸாத்யம் காலேநாபி துராஸதம் ॥ 13

त्रासनं सर्वभूतानां दारणं भेदनं तदा ।
प्रदीप्तमिव रोषेण शूलं जग्राह रावणः ॥

த்ராஸனம் ஸர்வபூதானாம் தாரணம் பேதனம் ததா ।
ப்ரதீப்தம் இவ ரோஷேண ஶூலம் ஜக்ராஹ ராவண: ॥ 14

ஏதஸ்மின் - இந்த
அந்தரே - ஸமயத்தில்
துஷ்டாத்மா - துஷ்டாத்மாவான
ராவண: - யாரையும் கதற வடிக்கும்
ஸ: ராவண: - அந்த ராவணன்
ராகவஸ்ய - ஸ்ரீராமரிடம்
க்ரோதாத் - கோபத்தால்
ப்ரஹர்துகாம: - புடைக்கருதியவனாய்
ததா - அப்பொழுது
வஜ்ரஸாரம் - வஜ்ராயுதத்திற்கு நிகரான உறுதிகொண்ட
மஹத்ப்ரஹரணம் - சிறந்த ஆயுதமும்
மஹாநாதம் - பேரொலி கொண்டதும்

ஸர்வ ஶத்ரு நிபர்ஹணம்	எல்லா சத்ருக்களையும் ஒழிக்கவல்லதும்
ஶைல ஶ்ருங்க நிபை:	மலைக்கொடு முடிகளை நிகர்த்த
கூடை:	சிகரங்களால்
சிதம்	நிரம்பியதும்
த்ருஷ்டி பயாவஹம்	பார்க்க பயங்கரமானதும்
ஸதூமம் இவ	புகையுடன் கூடியது போன்றதும்
தீக்ஷ்ணாக்ரம்	கூரிய நுனியுற்றதும்
யுகாந்தாக்நிசயோபமம்	ஊழிக்காலத் தீக்குவியலை நிகர்த்ததும்
அதிரௌத்ரம்	மிகக்கொடியதும்
அநாஸாத்யம்	அணுக முடியாததும்
காலேந அபி	யமனாலும்
துராஸதம்	தகைக்கவரியதும்
ஸர்வ பூதானாம்	எல்லா பிராணிகளையும்
த்ராஸனம்	நடுங்கச்செய்வதும்
தாரணம்	பிளப்பதும்
பேதனம்	சிதைப்பதும்
ரோஷேண	கோபங்கொண்டு
ப்ரதீப்தம் இவ	ஜ்வலிப்பது போன்றிகுப்பதுமான
ஶூலம்	சூலாயுதத்தை
ஸப்ருஶன்	பற்றி
ஜக்ராஹ	எடுத்தான்.

तच्छूलं परमक्रुद्धो मध्ये जग्राह वीर्यवान् ।
अनेकैः समरे शूरै राक्षसैः परिवारितः ॥

தத் ஶூலம் பரமக்ருத்தோ மத்யே ஜக்ராஹ வீர்யவான் ।
அனேகை: ஸமரேஶூரை ராக்ஷஸை: பரிவாரித: ॥ 15

யுதி	போரில்
வீர்யவான்	வீர்யசாலியான அவன்
ஸமரே	போரில்
ஶூரை:	சூரர்களான
அனேகை:	பல
ராக்ஷஸை:	அரக்கர்களால்
பரிவாரித:	சூழப்பெற்று
பரமக்ருத்த:	மிகக் கோபங்கொண்ட
தத் ஶூலம்	அந்த சூலத்தை
ஜக்ராஹ	கைக்கொண்டான்.

समुद्यम्य महाकायो ननाद युधि भैरवम् ।
संरक्तनयनो रोषात् स्वसैन्यमभिहर्षयन् ॥

ஸமுத்யம்ய மஹாகாயோ நநாத யுதி பைரவம் ।
ஸம்ரக்தநயனோ ரோஷாத் ஸ்வஸைன்யம் அபிஹர்ஷயன் ॥ 16

மஹாகாய:	- பேருடல் பெற்ற அவன்
ஸமுத்யம்ய	- துள்ளியெழுந்து
ரோஷாத்	- கோபத்தால்
ஸம்ரக்த நயன:	- கண்கள் சிவந்தவனாகி
ஸ்வஸைன்யம்	- தனது ஸேனையை
அபிஹர்ஷயன்	- உத்ஸாகப்படுதிக் கொண்டு
யுதி	- போரில்
பைரவம்	- பயங்கரமாய்
நநாத	- கர்ஜித்தான்.

पृथिवीं चान्तरिक्षं च दिशश्च प्रदिशस्तथा ।
प्राकम्पयत्तदा शब्दो राक्षसेन्द्रस्य दारुणः ॥

ப்ருதிவீம் ச அந்தரிக்ஷம் ச திஶஶ்ச ப்ரதிஶஸ் ததா ।
ப்ராகம்பயத் ததா ஶப்தோ ராக்ஷஸேந்த்ரஸ்:ய தாருண: ॥ 17

ததா	- அப்பொழுது
ராக்ஷஸேந்த்ரஸ்ய	- ராக்ஷஸமன்னனுடைய
தாருண:	- பயங்கரமான
ஶப்த:	- சத்தமானது
ப்ருதிவீம் ச	- பூமியையும்
அந்தரிக்ஷம் ச	- ஆகாயத்தையும்
திஶ: ச	- திக்குகளையும்
ப்ரதிஶ: ததா	- விதிக்குகளையும்
ப்ராகம்பயத்	- நடுங்கச் செய்தது.

अतिनादस्य नादेन तेन तस्य दुरात्मनः ।
सर्वभूतानि वित्रेसुः सागरश्च प्रचुक्षुभे ॥

அதிநாதஸ்ய நாதேந தேந தஸ்ய துராத்மன: ।
ஸர்வபூதானி வித்ரேஸு: ஸாகரஶ்ச ப்ரசுக்ஷுபே ॥ 18

அதிநாதஸ்ய	- பேரொலி கொண்ட
துராத்மன:	- துஷ்டாத்மாவான
தஸ்ய	- அவனுனடைய
தேந நாதேந	- அந்த சத்தத்தால்
ஸர்வ பூதானி	- எல்லாப் பிராணிகளும்
வித்ரேஸு:	- நடுநடுங்கின;
ஸாகர: ச	- கடலும்
ப்ரசுக்ஷுபே	- கலக்கமுற்றது.

स गृहीत्वा महावीर्यः शूलं तद्रावणो महत् ।
विनद्य सुमहानादं रामं परुषमब्रवीत् ॥

ஸ க்ருஹீத்வா மஹாவீர்ய: ஶூலம் தத் ராவணோ மஹத் ।
விநத்ய ஸுமஹாநாதம் ராமம் பருஷம் அப்ரவீத் ॥ 19

மஹாவீர்ய: - மகாவீர்யசாலியான
ஸ: - அந்த
ராவண: - ராவணன்
தத் - அந்த
மஹத் ஶூலம் - பெரும் சூலத்தை
க்ருஹீத்வா - கைக்கொண்டு
ஸுமஹாநாதம் - பேரொலி கொண்டு
விநத்ய - கர்ஜித்து
ராமம் - ஸ்ரீராமரைப் பார்த்து
பருஷம் - கொடுமையாக
அப்ரவீத் - பின்வருமாறு மொழிந்தான்.

शूलोऽयं वज्रसारस्ते राम रोषान्मयोद्यतः ।
तव भ्रातृसहायस्य सद्यः प्राणान् हरिष्यति ॥

ஶூலோऽயம் வஜ்ரஸாரஸ்தே ராம ரோஷான் மயோத்யத: ।
தவ ப்ராத்ருஸஹாயஸ்ய ஸத்ய: ப்ராணான் ஹரிஷ்யதி ॥ 20

ராம - ராம !
தே - உன்னிடம்
ரோஷாத் - கோபத்தால்
மயா - என்னால்
உத்யத: - கொள்ளப்பட்ட
வஜ்ரஸார: - வஜ்ராயுதத்தின் உறுதிகொண்ட
அயம் - இந்த
ஶூல: - சூலமானது
ப்ராத்ரு ஸஹாயஸ்ய- தம்பியைத் துணையாய் கொண்ட
தவ - உனது
ப்ராணான் - உயிரை
ஸத்ய: - இக்கணமே
ஹரிஷ்யதி - வாங்கப் போகிறது.

रक्षसामद्य शूराणां निहतानां चमूमुखे ।
त्वां निहत्य रणश्लाधिन् करोमि तरसा समम् ॥

ரக்ஷஸாம் அத்ய ஶூராணாம் நிஹதாநாம் சமூமுகே ।
த்வாம் நிஹத்ய ரணஶ்லாகின் கரோமி தரஸா ஸமம் ॥ 21

ரணஶ்லாகின்	-	''போர்ப்புகழ் கொண்டவனே !
தரஸா	-	விரைவாய்
த்வாம்	-	உன்னை
நிஹத்ய	-	கொன்று,
அத்ய	-	இப்பொழுது
சமூமுகே	-	படைமுகத்தில்
நிஹதாநாம்	-	கொல்லப்பட்ட
ஶூராணாம்	-	சூரர்களான
ரக்ஷஸாம்	-	அரக்கர்களுக்கு
ஸமம்	-	சமானனாய்
கரோமி	-	செய்கிறேன்.

तिष्ठेदानीं निहन्मि त्वामेष शूलेन राघव ।

திஷ்டேதானீம் நிஹன்மி த்வாம் ஏஷ ஶூலேன ராகவ । 22

ராகவ	-	ராம !
இதானீம்	-	இப்பொழுது
திஷ்ட	-	சற்று நில்லு;
த்வாம்	-	உன்னை
ஏஷ:	-	இதோ
ஶூலேன	-	சூலத்தால்
நிஹன்மி	-	வதைக்கின்றேன்.

एवमुक्त्वा स चिक्षेप तच्छूलं राक्षसाधिपः ॥

ஏவம் உக்த்வா ஸ சிக்ஷேப தத் ஶூலம் ராக்ஷஸாதிப: ॥ 23

ஸ:	-	அந்த
ராக்ஷஸாதிப:	-	ராவண மன்னன்
ஏவம்	-	இங்ஙனம்
உக்த்வா	-	சொல்லிவிட்டு
தத்	-	அந்த
ஶூலம்	-	சூலத்தை
சிக்ஷேப	-	விடுத்தான்.

तद्रावणकरान्मुक्तं विद्युज्ज्वालासमाकुलम् ।
अष्टघण्टं महानादं वियद्गतमशोभत ॥

தத் ராவணகரான் முக்தம் வித்யுஜ்ஜ்வாலா ஸமாகுலம் । 24
அஷ்ட கண்டம் மஹாநாதம் வியத்கதமஶோபத ॥

ராவணகராத்	-	ராவணனது கையால்
முக்தம்	-	விடுக்கப்பட்டதும்

வித்யுத் ஜ்வாலா ஸமாகுலம்-மின்னல் போன்ற ஜ்வாலைகளால் நிறைந்ததும்

அஷ்ட கண்டம் - எட்டு மணிகள் கட்டப் பெற்று
மஹாநாதம் - பேரொலி கொண்டதுமான
தத் - அது
வியத் கதம் - ஆகாயத்தை அடைந்ததாய்
அஶோபத - விளங்கிற்று.

तच्छूलं राघवो दृष्ट्वा ज्वलन्तं घोरदर्शनम् ।
ससर्ज विशिखान् रामश्चापमायम्य वीर्यवान् ॥

தத் ஶூலம் ராகவோ த்ருஷ்ட்வா ஜ்வலந்தம் கோரதர்ஶனம் ।
ஸஸர்ஜ விஶிகாந் ராமஶ்சாபமாயம்ய வீர்யவான் ॥ 25

வீர்யவான் - வீர்யசாலியான
ராகவ: - ரகுகுலதிலகர்
ராம: - ஶ்ரீராமர்
ஜ்வலந்தம் - ஜ்வலித்துக் கொண்டிருப்பதும்
கோர தர்ஶனம் - பயங்கரத் தோற்றமுற்றதுமான
தத் - அந்த
ஶூலம் - சூலத்தை
த்ருஷ்ட்வா - பார்த்து
சாபம் - வில்லை
ஆயம்ய - வளைத்து
விஶிகாந் - பாணங்களை
ஸஸர்ஜ - விடுத்தார்.

आपतन्तं शरौघेण वारयामास राघवः ।
उत्पतन्तं युगान्ताग्निं जलौघैरिव वासवः ॥

ஆபதந்தம் ஶரௌகேண வாரயாமாஸ ராகவ: ।
உத்பதந்தம் யுகாந்தாக்நிம் ஜலௌகைரிவ வாஸவ: ॥ 26

ராகவ: - ஶ்ரீராமர்,
உத்பதந்தம் - கிளம்பிய
யுகாந்தாக்நிம் - பிரளயாக்னியை
ஜலௌகை: - ஜலவர்ஷங்களால்
வாஸவ: - இந்திரன்
இவ - எவ்வண்ணமோ அவ்வண்ணமே,
ஆபதந்தம் - எதிர்த்து வரும் அதை (சூலத்தை)
ஶரௌகேண - பாணஸமூஹத்தால்
வாரயாமாஸ - தகைத்தார்.

निर्ददाह स तान् बाणान् रामकार्मुकनिःसृतान् ।
रावणस्य महाशूलः पतङ्गानिव पावकः ॥

நிர்ததாஹ ஸ தான் பாணான் ராம கார்முக நி:ஸ்ருதான் ।
ராவணஸ்ய மஹாஶூல: பதங்காநிவ பாவக: ॥ 27

ராவணஸ்ய - ராவணனது
ஸ: - அந்த
மஹாஶூல: - சிறந்த சூலாயுதமானது
ராம கார்முக நி: ஸ்ருதான்-ஸ்ரீராமரது வில்லினின்று வெளியார்ந்த
தான் - அந்த
பாணான் - பாணங்களை
பாவக: - அக்னி
பதங்காந் - விட்டில்களை
இவ - எரிப்பது போல்
நிர்ததாஹ - பொசுக்கி விட்டது.

तान् दृष्ट्वा भस्मसाद्भूताञ्शूलसंस्पर्शचूर्णितान् ।
सायकानन्तरिक्षस्थान् राघवः क्रोधमाहरत् ॥

தான் த்ருஷ்ட்வா ப்ஸ்மஸாத் பூதான் ஶூலஸம்ஸ்பர்ஶ சூர்ணிதான் ।
ஸாயகாந் அந்தரிக்ஷஸ்தான் ராகவ: க்ரோதமாஹரத் ॥ 28

ராகவ: - ஸ்ரீராமர்
அந்தரிக்ஷஸ்தான் - ஆகாயத்தையடைந்த
தான் ஸாயகாந் - அந்த பாணங்களை
ஶூலஸம்ஸ்பர்ஶ சூர்ணிதான்-சூலாயுதத்தின் ஸபர்சத்தால் தூளாகி
பஸ்மஸாத் பூதான் - சாம்பலானவைகளாய்
த்ருஷ்ட்வா - கவனித்து
க்ரோதம் - கோபம்
ஆஹரத் - கொண்டார்.

स तां मातलिनाऽऽनीतां शक्तिं वासवनिर्मिताम् ।
जग्राह परमक्रुद्धो राघवो रघुनन्दनः ॥

ஸ தாம் மாதலிநா(ஆ)நீதாம் ஶக்திம் வாஸவ நிர்மிதாம் ।
ஜக்ராஹ பரமக்ருத்தோ ராகவோ ரகுநந்.தன: ॥ 29

ஸ: - அந்த
ரகுநந்தன: - ரகுகுலச்செல்வரான
ராகவ: - ஸ்ரீராமர்
பரமக்ருத்த: - மிகக் கோபங்கொண்டவராய்
மாதலிநா - மாதலியால்
ஆநீதாம் - கொண்டு வரப்பட்டதும்
வாஸவ நிர்மிதாம் - இந்திரனால் சிருஷ்டிக்கப்பட்டதுமான
தாம் ஶக்திம் - அந்தச் சக்தியை
ஜக்ராஹ - கைக்கொண்டார்.

सा तोलिता बलवता शक्तिर्घण्टाकृतस्वना ।
नभः प्रज्वालयामास युगान्तोल्केव सप्रभा ॥

ஸா தோலிதா பலவதா ஶக்திர் கண்டா க்ருதஸ்வநா ।
நப: ப்ரஜ்வாலயாமாஸ யுகாந்தோல்கா இவ ஸப்ரபா ॥ 30

பலவதா	-	பலசாலியாகிய அவரால்
தோலிதா	-	பிரயோகிக்கப்பட்ட
ஸா ஶக்தி:	-	அந்தச் சக்தி
கண்டா க்ருதஸ்வநா	-	மணியோசை கொண்டதாய்
யுகாந்தோல்கா	-	ஊழிக்கொள்ளி
இவ	-	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
ஸப்ரபா	-	ஒளிகொண்டதாய்
நப:	-	வானத்தை
ப்ரஜ்வாலயாமாஸ	-	ஜ்வலிக்கச் செய்தது.

सा क्षिप्ता राक्षसेन्द्रस्य तस्मिञ्शूले पपात ह ।

ஸா க்ஷிப்தா ராக்ஷஸேந்த்ரஸ்ய தஸ்மின் ஶூலே பபாத ஹ । 31

க்ஷிப்தா	-	பிரயோகிக்கப்பட்ட
ஸா	-	அது
ராக்ஷஸேந்த்ரஸ்ய	-	ராக்ஷஸமன்னனது
தஸ்மின்	-	அந்த
ஶூலே	-	சூலத்தில்
பபாத ஹ	-	மோதியது.

भिन्नः शक्त्या महाञ्शूलो निपपात हतद्युतिः ॥

பின்ன: ஶக்த்யா மஹான் ஶூலோ நிபபாத ஹதத்யுதி: ॥ 32

மஹான்	-	சிறந்த
ஶூல:	-	சூலமானது
ஶக்த்யா	-	சக்தியால்
பின்ன:	-	பிளவுண்டதாய்
ஹதத்யுதி:	-	மகிமையற்று
நிபபாத	-	கீழ் விழுந்தது.

साधु साध्विति भूतानि प्रशशंसु रघूत्तमम् ॥

ஸாது ஸாத்விதி பூதானி ப்ரஶஶம்ஸு ரகூத்தமம் 33

பூதானி	-	பிராணிகள்
ஸாது	-	நன்று
ஸாது இதி	-	நன்று என்று
ரகூத்தமம்	-	ஸ்ரீராமரை
ப்ரஶஶம்ஸு:	-	புகழ்ந்து கொண்டாடினார்கள்.

निर्बिभेद ततो बाणैर्हयानस्य महाजवान् ।
रामस्तीक्ष्णैर्महावेगैर्वज्रकल्पैः शितैः शरैः ॥

நிர்பிபேத ததோ பாணைர் ஹயாநஸ்ய மஹாஜவான் ।
ராமஸ்தீக்ஷ்ணைர் மஹாவேகை: .வஜ்ரகல்பை: ஶிதை: ஶரை: ॥ 34

ராம: - ஸ்ரீராமர்
தத: - அப்பொழுது
அஸ்ய - இவனது
மஹாஜவான் - வேகங் கொண்ட
ஹயாந் - குதிரைகளை
வஜ்ரகல்பை: - வஜ்ராயுதத்தை நிகர்த்த
தீக்ஷ்ணை: - கொடியவைகளான
ஶரை: - கணைகளாலும்
மஹாவேகை: - பெருவேகங் கொண்ட
ஶிதை: - கூரிய
பாணை: - பாணங்களாலும்
நிர்பிபேத - பிளந்தார்.

निर्बिभेदोरसि ततो रावणं निशितैः शरैः ।
राघवः परमायत्तो ललाटे पत्रिभिस्त्रिभिः ॥

நிர்பிபேதோரஸி ததோ ராவணம் நிஶிதை: ஶரை: ।
ராகவ: பரமாயத்தோ லலாடே பத்ரிபிஸ்த்ரிபி: ॥ 35

தத: - அப்பொழுது
ராகவ: - ஸ்ரீராமர்
பரமாயத்த: - மிக ஊக்கங்கொண்டவராய்
ராவணம் - ராவணனை
உரஸி - மார்பில்
நிஶிதை: - கூரிய
ஶரை: - பாணங்களாலும்
லலாடே - நெற்றியில்
த்ரிபி: - மூன்று
பத்ரிபி: - பாணங்களாலும்
நிர்பிபேத - பிளந்தார்.

स शरैर्भिन्नसर्वाङ्गो गात्रप्रस्रुतशोणितः ।
राक्षसेन्द्रः समूहस्थः फुल्लाशोक इवाबभौ ॥

ஸ ஶரைர் பின்ன ஸர்வாங்கோ காத்ர ப்ரஸ்ருதஶோணித: ।
ராக்ஷஸேந்த்ர: ஸமூஹஸ்த: புல்லாஶோக இவாபபௌ ॥ 36

ஸமூஹஸ்த: - படையின் நடுவிலிருக்கும்

ஸ:	அந்த
ராக்ஷஸேந்த்ர:	ராக்ஷஸமன்னன்
ஶரை:	பாணங்களால்
பின்ன ஸர்வாங்க:	எல்லா அங்கங்களும் பிளவுண்டவனாய்
காத்ர ப்ரஸ்ருதஶோணித:	உடலினின்று ரத்தம் பெருக நின்றவனாய்
புல்லாஶோக:	பூத்த அசோகமரம்
இவ	போல்
ஆபெள	பிரகாசித்தான்.

स रामबाणैरभिविद्धगात्रो निशाचरेन्द्रः क्षतजार्द्रगात्रः ।

जगाम खेदं च समाजमध्ये क्रोधं च चक्रे सुभृशं तदानीम् ॥

ஸ ராம பாணை: அபிவித்த காத்ர:
நிஶாசரேந்த்ர: க்ஷதஜார்த்ரகாத்ர: ।
ஜகாம கேதம் ச ஸமாஜமத்யே
க்ரோதம் ச சக்ரே ஸுப்ருஶம் ததாநீம் ॥ 37

ஸ:	அந்த
நிஶாசரேந்த்ர:	ராக்ஷஸமன்னன்
ஸமாஜமத்யே	போர்க்களத்தின் நடுவில்
ராம பாணை:	ராமபாணங்களால்
அபி வித்த காத்ர:	அவயவங்களில் தாக்கப்பட்டவனாய்
க்ஷத ஜார்த்ர காத்ர: ச	ரத்தம் வழிந்த உடலுடையவனாய்
கேதம்	வருத்தத்தை
ஜகாம	கொண்டான்;
ததாநீம்	அப்பொழுது
ஸுப்ருஶம்	மிக
க்ரோதம் ச	கோபத்தையும்
சக்ரே	கொண்டான்.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே சதுர்விம்ஶதி
ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் யுத்த காண்டே ராவண ஶூலபங்கோ நாம
சதுருத்தரஶததம: ஸர்க: ॥

பஞ்சோத்தர ஶததம: ஸர்க: - 105

स तेन तु तथा क्रोधात् काकुत्स्थेनार्दितो रणे ।
रावणः समरश्लाघी महाक्रोधमुपागमत् ॥

ஸ தேந து ததா க்ரோதாத் காகுத்ஸ்தேநார்திதோ ரணே ।
ராவண: ஸமரஶ்லாகீ மஹாக்ரோதம் உபாகமத் ॥ 1

ஸமரஶ்லாகீ - போர்புகழ் கொண்டவனான
ஸ: - அந்த
ராவண: - ராவணன்
து - அப்பொழுது
ரணே - போரில்
தேந காகுத்ஸ்தேந - அந்த ஸ்ரீராமரால்
க்ரோதாத் - கோபங்கொண்டு
ததா - அவ்வாறு
அர்தித: - துன்புறுத்தப்பட்டவனாய்
மஹாக்ரோதம் - பெருஞ்சினத்தை
உபாகமத் - கொண்டான்.

स दीप्तनयनो रोषाच्चापमायम्य वीर्यवान् ।
अभ्यर्दयत् सुसंक्रुद्धो राघवं परमाहवे ॥

ஸ தீப்த நயனோ ரோஷாத் சாபம் ஆயம்ய வீர்யவான் ।
அப்யர்தயத் ஸுஸங்க்ருத்தோ ராகவம் பரமாஹவே ॥ 2

வீர்யவான் - வீர்யவானான
ஸ: - அவன்
ஸுஸங்க்ருத்த: - மிகச்சினங்கொண்டு
ரோஷாத் - கோபத்தால்
தீப்த நயன: - கண்கள் ஜ்வலிக்கின்றவனாய்
சாபம் - வில்லை
ஆயம்ய - வளைத்து
பரமாஹவே - கடும் போரில்
ராகவம் - ஸ்ரீராமரை
அப்யர்தயத் - தாக்கினான்.

बाणधारासहस्रैस्तैः स तोयद इवाम्बरात् ।
राघवं रावणो बाणैस्तटाकमिव पूरयत् ॥

பாணதாரா ஸஹஸ்ரைஸ்தை: ஸ தோயத இவாம் பராத் ।
ராகவம் ராவணோ பாணைஸ் தடாகம் இவ பூரயத் ॥ 3

ஸ: - அந்த

ராவண:	-	ராவணன்
அம்பராத்	-	ஆகாயத்திலிருந்து
தோயத:	-	மேகம்
தடாகம்	-	ஒரு தடாகத்தில்
இவ	-	பொழிவது போல்
ராகவம்	-	ஸ்ரீராமரை
பாணதாரா ஸஹஸ்ரை:	-	அநேக சரமாரிகளான
தை: பாணை:	-	அந்த பாணங்களால்
இவ	-	முற்றும்
பூரயத்	-	நிரப்பினான்.

पूरितः शरजालेन धनुर्मुक्तेन संयुगे ।
महागिरिरिवाकम्प्यः काकुत्स्थो न प्रकम्पते ॥

பூரித: ஶரஜாலேன தநுர்முக்தேன ஸம்யுகே ।
மஹாகிரி: இவ அகம்ப்ய: காகுத்ஸ்தோ ந ப்ரகம்பதே ॥ 4

மஹாகிரி: இவ	-	மாமலைபோல்
அகம்ப்ய:	-	சலிக்காதவரான
காகுத்ஸ்த:	-	ஸ்ரீராமர்
ஸம்யுகே	-	போரில்
தநுர்முக்தேன	-	வில்லினின்று விடுக்கப்பட்ட
ஶரஜாலேன	-	பாணஜாலத்தால்
பூரித:	-	நிரப்பப்பட்டவராய்
ப்ரகம்பதே ந	-	சலியாதிருந்தார்.

स शरैः शरजालानि वारयन् समरे स्थितः ।
गभस्तीनिव सूर्यस्य प्रतिजग्राह वीर्यवान् ॥

ஸ ஶரை: ஶரஜாலானி வாரயன் ஸமரே ஸ்தித: ।
கபஸ்தீன் இவ ஸூர்யஸ்ய ப்ரதிஜக்ராஹ வீர்யவான் ॥ 5

ஸமரே	-	போரில்
வீர்யவான்	-	தனி வீரராய்
ஸ்தித:	-	நிற்கும்
ஸ:	-	அவர்
ஶரை:	-	பாணங்களால்
வாரயன்	-	தகைப்பவராய்
ஸூர்யஸ்ய	-	சூரியனுடைய
கபஸ்தீன் இவ	-	கிரணங்களை நிகர்த்த
ஶரஜாலானி	-	பாணஜாலங்களை
ப்ரதிஜக்ராஹ	-	மீண்டும் கைக்கொண்டார்.

ततः शरसहस्त्राणि क्षिप्रहस्तो निशाचरः ।
निजघानोरसि क्रुद्धो राघवस्य महात्मनः ॥

தத: ஶரஸஹஸ்ராணி க்ஷிப்ரஹஸ்தோ நிஶாசர: ।
நிஜகானோரஸி க்ருத்தோ ராகவஸ்ய மஹாத்மன: ॥ 6

க்ஷிப்ர ஹஸ்த:	- கரவேகமமைந்த
நிஶாசர:	- அரக்கன்
க்ருத்த:	- சினங்கொண்டு
தத:	- அப்பொழுது
மஹாத்மன:	- மகாத்மாவாகிய
ராகவஸ்ய	- ஸ்ரீராமரது
உரஸி	- மார்பில்
ஶரஸஹஸ்ராணி	- பல பாணங்களை
நிஜகான	- நாட்டினான்.

स शोणितसमादिग्धः समरे लक्ष्मणाग्रजः ।
दृष्टः फुल्ल इवारण्ये सुमहान् किशुकद्रुमः ॥

ஸ ஶோணித ஸமாதிக்த: ஸமரே லக்ஷ்மணாக்ரஜ: ।
த்ருஷ்ட: புல்ல இவாரண்யே ஸுமஹான் கிம்ஶுகத்ரும: ॥ 7

ஸ:	- அந்த
லக்ஷ்மணாக்ரஜ:	- ஸ்ரீராமர்
ஸமரே	- போரில்
ஶோணித ஸமாதிக்த:	-ரத்தத்தால் பூசப்பட்டவராய்
அரண்யே	- காட்டில்
புல்ல:	- பூத்த
ஸுமஹான்	- பெரிய
கிம்ஶுகத்ரும: இவ	- பலாசமரம் போல்
த்ருஷ்ட:	- காணப்பட்டார்.

शराभिघातसंरब्धः सोऽपि जग्राह सायकान् ।
काकुत्स्थः सुमहातेजा युगान्तादित्यतेजसः ॥

ஶராபிகாதஸம்ரப்த: ஸோऽபி ஜக்ராஹ ஸாயகான் ।
காகுத்ஸ்த: ஸுமஹாதேஜா யுகாந்த ஆதித்ய தேஜஸ: ॥ 8

ஸுமஹாதேஜா:	- மிக தேஜஸ்வியாகிய
ஸ: காகுத்ஸ்த: அபி	- அந்த ஸ்ரீராமரும்
ஶராபிகாதஸம்ரப்த:	- பாணங்களின் அடியால் ஆவேசங்கொண்டவராய்
யுகாந்த ஆதித்ய தேஜஸ:	-ஊழிச்சூரியனை நிகர்த்த ஒளிகொண்டவைகளான

ஸாயகான்	-	பாணங்களை
ஜக்ராஹ	-	கைக்கொண்டார்.

तत:अन्योन्यं सुसंरब्धावुभौ तौ रामरावणौ ।
शरान्धकारे समरे नोपालक्षयतां तदा ॥

தத: அன்யோன்யம் ஸுஸம்ரப்தா் உபௌ தௌ ராம ராவணௌ ।
ஶராந்தகாரே ஸமரே ந உபாலக்ஷதாம் ததா ॥ 9

தத:	-	அப்பொழுது
ஸுஸம்ரப்தௌ	-	மிக ஆவேசங்கொண்டவர்களாய்
தௌ	-	அந்த
ராம ராவணௌ	-	ஸ்ரீராமர், ராவணன்
உபௌ	-	இருவர்களும்
ஶராந்தகாரே	-	பாணங்களால் இருண்ட
ஸமரே	-	போரில்
அன்யோன்யம்	-	ஒருவரையொருவர்
ததா	-	அப்பொழுது
உபாலக்ஷயதாம் ந	-	கண்டு கொள்ளாதிருந்தனர்.

ततः क्रोधसमाविष्टो रामो दशरथात्मजः ।
उवाच रावणं वीरः प्रहस्य परुषं वचः ॥

தத: க்ரோத ஸமாவிஷ்டோ ராமோ தஶரதாத்மஜ: ।
உவாச ராவணம் வீர: ப்ரஹஸ்ய பருஷம் வச: ॥ 10

வீர:	-	வீரரும்
தஶரதாத்மஜ:	-	தசரதசக்ரவர்த்தியாரின் திருமகனாருமாகிய
ராம:	-	ஸ்ரீராமர்
தத:	-	அப்பொழுது
க்ரோத ஸமாவிஷ்ட:	-	கோபம் மேலிட்டவராய்
ராவணம்	-	ராவணனைப் பாரத்து
ப்ரஹஸ்ய	-	நகைத்து
பருஷம்	-	கடுமையான
வச:	-	சொல்லொன்றை
உவாச	-	பின்வருமாறு மொழிந்தார்.

मम भार्या जनस्थानादज्ञानाद्राक्षसाधम ।
हृता ते विवशा यस्मात्तस्मात्त्वं नासि वीर्यवान् ॥

மம பார்யா ஜனஸ்தாநாத் அஞாநாத் ராக்ஷஸாதம ।
ஹ்ருதா தே விவஶா யஸ்மாத் தஸ்மாத் த்வம் ந அஸி வீர்யவான் ॥ 11

ராக்ஷஸாதம	-	ராக்ஷஸப்பதரே !
தே	-	உன்னால்

விவஶா	-	பராதீனையான
மம	-	எனது
பார்யா	-	மனைவி
ஜனஸ்தாநாத்	-	ஜனஸ்தானத்திலிருந்து
அஞாநாத்	-	அறியாதவனாய்
ஹ்ருதா	-	திருடிக்கொண்டு போகப்பட்டனள்
யஸ்மாத் தஸ்மாத்	-	என்ற அக்காரணத்தால்
த்வம்	-	நீ
வீர்யவான்	-	வீர்யசாலி
அஸி ந	-	அல்ல.

मया विरहितां दीनां वर्तमानां महावने ।
वैदेहीं प्रसभं हृत्वा शूरोऽहमिति मन्यसे ॥

மயா விரஹிதாம் தீனாம் வர்தமானாம் மஹாவனே ।
வைதேஹீம் ப்ரஸபம் ஹ்ருத்வா ஶூரோऽஹமிதி மன்யஸே ॥ 12

மயா	-	என்னை
விரஹிதாம்	-	பிரிந்து
மஹாவனே	-	பெருங்காட்டில்
வர்தமானாம்	-	இருக்கும்
தீனாம்	-	ஏக்கங்கொண்ட
வைதேஹீம்	-	ஜானகியை
ப்ரஸபம்	-	பலாத்காரமாய்
ஹ்ருத்வா	-	திருடிவிட்டு
அஹம்ஶூர:	-	'நான் சூரன்'
இதி	-	என்று
மன்யஸே	-	நினைத்துக் கொண்டிருக்கின்றனை.

स्त्रीषु शूर विनाथासु परदाराभिमर्शक ।
कृत्वा कापुरुषं कर्म शूरोऽहमिति मन्यसे ॥

ஸ்த்ரீஷு ஶூர விநாதாஸு பரதாராபிமர்ஶக ।
க்ருத்வா காபுருஷம் கர்ம ஶூரோऽஹம் இதி மன்யஸே ॥ 13

பரதாராபிமர்ஶக	-	பிறர்மனைவிகளை விழையும்
ஶூர	-	சூரனே !
விநாதாஸு	-	ரக்ஷகர் இல்லாத
ஸ்த்ரீஷு	-	பெண்களிடம்
காபுருஷம்	-	இழிய
கர்ம	-	தொழிலை
க்ருத்வா	-	புரிந்து
அஹம்	-	'நான்

ஶூர:	-	சூரன்'
இதி	-	என்று
மன்யஸே	-	நினைத்துக் கொண்டிருக்கின்றனை.

भिन्नमर्याद निर्लज्ज चारित्रेष्वनवस्थित ।
दर्पान्मृत्युमुपादाय शूरोऽहमिति मन्यसे ॥

பின்னமர்யாத நிர்லஜ்ஜ சாரித்ரேஷு அனவஸ்தித ।
தர்பான் ம்ருத்யும் உபாதாய ஶூரோ஽ஹமிதி மன்யஸே ॥ 14

பின்னமர்யாத	-	நெறிகெட்டவனே !
நிர்லஜ்ஜ	-	வெட்கமற்றவனே !
சாரித்ரேஷு	-	நன்னடக்கைகளில்
அனவஸ்தித	-	நாட்டமற்றவனே !
தர்பாத்	-	செருக்கால்
ம்ருத்யும்	-	நமனை
உபாதாய	-	நாடி
அஹம்	-	'நான்
ஶூர:	-	சூரன்'
இதி	-	என்று
மன்யஸே	-	நினைத்துக் கொண்டிருக்கின்றனை.

शूरेण धनदभ्रात्रा बलैः समुदितेन च ।
श्लाघनीयं यशस्यं च कृतं कर्म महत्त्वया ॥

ஶூரேண தனத ப்ராத்ரா பலை: ஸமுதிதேன ச ।
ஶ்லாகநீயம் யஶஸ்யம் ச க்ருதம் கர்ம மஹத் த்வயா ॥ 15

தனத ப்ராத்ரா	-	குபேரனது தம்பியும்
ஶூரேண	-	சூரனும்
பலை:	-	சேனைகளோடு
ஸமுதிதேன ச	-	கூடியவனுமான
த்வயா	-	உன்னால்
ஶ்லாகநீயம்	-	கொண்டாடத்தக்கதும்
யஶஸ்யம் ச	-	புகழுக்குப் பாத்திரமானதுமான
மஹத்	-	பெரும்
கர்ம	-	காரியம்
க்ருதம்	-	செய்து முடிக்கப்பட்டது.

उत्सेकेनाभिपन्नस्य गर्हितस्याहितस्य च ।
कर्मणः प्राप्नुहीदानीं तस्याद्य सुमहत् फलम् ॥

உத்ஸேகேந அபிபன்னஸ்ய கர்ஹிதஸ்ய அஹிதஸ்ய ச ।
கர்மண: ப்ராப்னுஹி இதாநீம் தஸ்ய அத்ய ஸுமஹத் பலம் ॥ 16

உத்ஸேகேந	செருக்கால்
அபிபன்னஸ்ய	விளைந்ததும்
கர்ஹிதஸ்ய	இழிந்ததும்
அஹிதஸ்ய ச	நன்மைக்கிடமில்லாததுமான
தஸ்ய	அந்த
கர்மண:	காரியத்தின்
ஸுமஹத்	பெரும்
பலம்	பயனை
அத்ய	இன்று
இதாநீம்	இப்பொழுது
ப்ராப்நுஹி	நீ பெறுவாய்.

शूरोऽहमिति चात्मानमवगच्छसि दुर्मते ।

ஶூரோऽஹமிதி ச ஆத்மானம் அவகச்சஸி துர்மதே । 17

துர்மதே	துர்புத்தியே !
ஆத்மானம்	உன்னை
அஹம் ச ஶூர:	'நான் தான் சூரன்'
இதி	என்று
அவகச்சஸி	எண்ணிக் கொண்டிருக்கின்றனை.

नैव लज्जास्ति ते सीतां चोरवद्व्यपकर्षतः ॥

நைவ லஜ்ஜா(அ)ஸ்தி தே ஸீதாம் சோரவத் வ்யபகர்ஷத: ॥ 18

ஸீதாம்	ஸீதையை
சோரவத்	திருடன் போல
வ்யபகர்ஷத:	திருடிய
தே	உனக்கு
லஜ்ஜா	வெட்கம்
அஸ்தி ந ஏவ	இல்லவே இல்லை.

यदि मत्सन्निधौ सीता धर्षिता स्यात्त्वया बलात् ।
भ्रातरं तु खरं पश्येस्तदा मत्सायकैर्हतः ॥

யதி மத்ஸந்நிதௌ ஸீதா தர்ஷிதா ஸ்யாத் த்வயா பலாத் । 19
ப்ராதரம் து கரம் பஶ்யேத் ததா மத்ஸாயகைர் ஹத: ॥

த்வயா	உன்னால்
மத்ஸந்நிதௌ	என் முன்னிலையில்
ஸீதா	ஸீதை
பலாத்	பலாத்காரமாய்
தர்ஷிதா ஸ்யாத்	கிட்டப் பெற்றிருப்பாள்
யதி	ஆகில்

ததா	அப்பொழுது
மத்ஸாயகை:	எனது பாணங்களால்
ஹத:	கொல்லப்பட்ட நீ
ப்ராதரம்	தம்பியாகிய
கரம் து	கரனையும்
பஶ்யே:	கண்கூடாய் தரிசித்திருப்பாய்.

दिष्ट्यासि मम दुष्टात्मंश्चक्षुर्विषयमागतः ।

திஷ்டயா அஸி மம துஷ்டாத்மன் சக்ஷுர் விஷயம் ஆகத: । 20

துஷ்டாத்மன்	துராத்மாவே !
மம	எனது
சக்ஷுர் விஷயம்	கட்புலனை
ஆகத: அஸி	கிட்டி விட்டனை;
திஷ்டயா	எனது கொள்கை நிறைவேறியது.

अद्य त्वां सायकैस्तीक्ष्णैर्नयामि यमसादनम् ॥

அத்ய த்வாம் ஸாயகை: தீக்ஷணை: நயாமி யமஸாதனம் ॥ 21

அத்ய	இப்பொழுது
தீக்ஷணை: ஸாயகை:	கூரிய பாணங்களால்
த்வாம்	உன்னை
யமஸாதனம்	நமனுலகுக்கு
நயாமி	அனுப்பி வைக்கிறேன்.

अद्य ते मच्छरैश्छिन्नं शिरो ज्वलितकुण्डलम् ।
क्रव्यादा व्यपकर्षन्तु विकीर्णं रणपांसुषु ॥

அத்ய தே மச்சரைஶ் சின்னம் ஶிரோ ஜ்வலித குண்டலம் ।
க்ரவ்யாதா வ்யபகர்ஷந்து விகீர்ணம் ரணபாம்ஸுஷு ॥ 22

அத்ய	இப்பொழுது
மச்சரை:	எனது பாணங்களால்
சின்னம்	அறுக்கப்பட்டு
ரணபாம்ஸுஷு	போர் புழுதிகளில்
விகீர்ணம்	புரளும்
ஜ்வலித குண்டலம்	ஜ்வலிக்கும் குண்டலங்களுற்ற
தே	உனது
ஶிர:	தலையை
க்ரவ்யாதா:	ஊனுண்பவைகள்
வ்யபகர்ஷந்து	இங்குமங்கும் இழுக்கட்டும்.

निपत्योरसि गृध्रास्ते क्षितौ क्षिप्तस्य रावण ।
पिबन्तु रुधिरं तर्षाच्छरशल्यान्तरोत्थितम् ॥

நிபத்யோரஸி க்ருத்ரா: தே க்ஷிதௌ க்ஷிப்தஸ்ய ராவண ।
பிபந்து ருதிரம் தர்ஷாத் சரஶல்யாந்தரோத்திதம் ॥ 23

ராவண	ராவண !
க்ருத்ரா:	கழுகுகள்
க்ஷிதௌ	பூமியில்
க்ஷிப்தஸ்ய	வீழ்த்தப்பட்ட
தே உரஸி	உனது மார்பில்
நிபத்ய	உட்கார்ந்து
சரஶல்யாந்தரோத்திதம்	பாணப் புண்களினின்று வெளிவரும்
ருதிரம்	ரத்தத்தை
தர்ஷாத்	தாகத்துடன்
பிபந்து	பருகட்டும்.

अद्य मद्बाणभिन्नस्य गतासोः पतितस्य ते ।
कर्षन्त्वान्त्राणि पतगा गरुत्मन्त इवोरगान् ॥

அத்ய மத்பாண பின்னஸ்ய கதாஸோ: பதிதஸ்யதே ।
கர்ஷந்த்வான்த்ராணி பதகா கருத்மந்த இவோரகான் ॥ 24

அத்ய	இப்பொழுது
மத்பாணபின்னஸ்ய	எனது பாணங்களால் பிளவுண்டு
கதாஸோ:	உயிரிழந்து
பதிதஸ்ய	சாய்ந்த
தே	உனது
ஆன்த்ராணி	நரம்புகளை
பதகா:	பறவைகள்,
உரகான்	பாம்புகளை
கருத்மந்த:	கருடர்கள்
இவ	எவ்வாறோ அவ்வாறே
கர்ஷந்து	இழுக்கட்டும்.

दुष्टोऽसि महतः कालाद्दिष्ट्या दृष्टिपथं गतः ।
अद्य क्रोधं विमोक्ष्यामि सीताहरणसंभवम् ॥

துஷ்டோSஸி மஹத: காலாத் திஷ்ட்யா த்ருஷ்டி பதம் கத: ।
அத்ய க்ரோதம் விமோக்ஷ்யாமி ஸீதாஹரண ஸம்பவம் ॥ 25

துஷ்ட:	துஷ்டனாகிய நீ
மஹத:	நீண்ட
காலாத்	காலத்திற்குப் பின்
திருஷ்டி பதம்	கட்புலனை
கத: அஸி	அடைந்திருக்கின்றாய்;
திஷ்டயா	நன்று, கோரியது கிட்டிற்று;

அத்ய - இப்பொழுது
ஸீதாஹரண ஸம்பவம்-ஸீதையைத் திருடியதாலுண்டான
க்ரோதம் - சினத்தை
விமோக்ஷ்யாமி - தணித்துக் கொள்வேன்.

इत्येवं संवदन् वीरो रामः शत्रुनिबर्हणः ।
राक्षसेन्द्रं समीपस्थं शरवर्षैरवाकिरत् ॥

இத்யேவம் ஸம்வதன் வீரோ ராம: ஶத்ரு நிபர்ஹண: ।
ராக்ஷஸேந்த்ரம் ஸமீபஸ்தம் ஶரவர்ஷை: அவாகிரத் ॥ 26

ஶத்ரு நிபர்ஹண: - சத்ருஸம்ஹாரகரும்
வீர: - வீரருருமான
ராம: - ஸ்ரீராமர்
இதி ஏவம் - மேற்கண்டவாறு
ஸம்வதன் - கூறிக்கொண்டே
ஸமீபஸ்தம் - சமீபத்திலிருக்கும்
ராக்ஷஸேந்த்ரம் - ராக்ஷஸமன்னன் மீது
ஶரவர்ஷை: - சரமாரி
அவாகிரத் - பொழிந்தார்.

बभूव द्विगुणं वीर्यं बलं हर्षश्च संयुगे ।
रामस्यास्त्रबलं चैव शत्रोर्निधनकाङ्क्षिणः ॥

பபூவ த்விகுணம் வீர்யம் பலம் ஹர்ஷஶ்ச ஸம்யுகே ।
ராமஸ்ய அஸ்த்ரபலம் சைவ ஶத்ரோ: நிதன காங்க்ஷிண: ॥ 27

ஶத்ரோ: - சத்ருவின்
நிதன காங்க்ஷிண: - வதையைக் கோரிய
ராமஸ்ய - ஸ்ரீராமருக்கு
ஸம்யுகே - போரில்
வீர்யம் - ஆண்மை
த்விகுணம் பபூவ - இரட்டித்து விளங்கியது;
பலம் - ஆற்றலும்
ஹர்ஷ: ச - உத்ஸாஹமும்
அஸ்த்ர பலம் ஏவ - அஸ்திர சக்தியும்
ச
- அவ்வண்ணமே இரட்டித்து விளங்கியது.

प्रादुर्बभूवुरस्त्राणि सर्वाणि विदितात्मनः ।
प्रहर्षाच्च महातेजाः शीघ्रहस्ततरोऽभवत् ॥

ப்ராதுர்பபூவு: அஸ்த்ராணி ஸர்வாணி விதிதாத்மன: ।
ப்ரஹர்ஷாத் ச மஹாதேஜா ஶீக்ரஹஸ்ததரோऽபவத் ॥ 28

விதிதாத்மன: - ஸர்வமுமறிந்த அவருக்கு

ஸர்வாணி - எல்லா
அஸ்த்ராணி ச - அஸ்திரங்களும்
ப்ராதுர் பபூவு: - முன் தோன்றின;
மஹாதேஜா: - மகாதேஜஸ்வியாகுமவர்
ப்ரஹர்ஷாத் - உத்ஸாகத்தால்
ஶீக்ர ஹஸ்த தர: - மிக விரைந்த கை வேகங்கொண்டவராக
அபவத் - ஆனார்.

शुभान्येतानि चिह्नानि विज्ञायात्मगतानि सः ।
भूय एवार्दयद्रामो रावणं राक्षसान्तकृत् ॥

ஶுபானி ஏதானி சிஹ்நாநி விஞாய ஆத்மகதாநி ஸ: ।
பூய ஏவ அர்தயத் ராமோ ராவணம் ராக்ஷஸாந்தக்ருத் ॥ 29

ஸ: - அந்த
ராம: - ஸ்ரீராமர்,
ஏதானி - இந்த
ஆத்மகதாநி - தன்னிடம் தோன்றிய
ஶுபானி - நல்ல
சிஹ்நாநி - சகுனங்களை
விஞாய - கவனித்து,
ராக்ஷஸாந்தக்ருத் - அரக்கர்களுக்கு அழிவை விளைப்பவராய்
ராவணம் - ராவணனை
பூய: ஏவ - மீண்டும்
அர்தயத் - துன்புறுத்தினார்.

हरीणां चाश्मनिकरैः शरवर्षैश्च राघवात् ।
हन्यमानो दशग्रीवो विघूर्णहृदयोऽभवत् ॥

ஹரீணாம் ச அஶ்மநிகரை: ஶரவர்ஷைஶ்ச ராகவாத் ।
ஹன்யமானோ தஶக்ரீவோ விகூர்ண ஹ்ருதயோऽபவத் ॥ 30

ஹரீணாம் - வானரர்களின்
